# விடுதலை

FREED



## 2010

## ஜெயத்தின் ஆண்டு

குதிரை யுத்தநாளுக்கு ஆயத்தமாக்கப்படும்; ஜெயமோ கர்த்தரால் வரும்.

நீதிமொழிகள் 21:31

ஆபத்துக்காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு;
நான் உன்னை விடுவிப்பேன், நீ என்னை மகிமைப்படுத்துவாய்.

சங்கீதம் 50:15

சத்தம் 5

# ஊழியங்கள்





















குதிரை யுத்தநாளுக்கு ஆயத்தமாக்கப்படும்; ஜெயமோ கர்த்தரால் வரும்.

## உள்ளே...


1. நினைவில் 2
2. சபையின் தரிசனம் 3
3. நிச்சயமாகவே..... 4
3. உனக்காக....... 5
4. தொடரும் சபையின்... 6
5. ஆச்சரியமான ஒளி.... 8
7. சிந்திக்க... 9
8. Who is Jesus? 10
9. என் தேவனாகிய... 11
10. கப்பல்... 12
11. உலகத்தின் கையில்... 13
12. நான் கண்ட இயேசு... 14
13. கிறிஸ்தவ வாழ்வில்... 15
14. நல்லமணிகளே... 16
15. உலக பொருளாதார... 18
16. காலங்களைக் கர்த்தரோடு... 20
17. தமிழ் வேதாகமத்தின்... 22



**நூல், அட்டை வடிவமைப்பு, தட்டச்சு:**

ஜேம்ஸ் இருதயநாயகம்

கிரிதரா முன்னநாதன்

பிரசானா புதியவன்

கிளாஸ்டோன் இருதயநாயகம்



Tamil Baptist Menighet
Vålerengata 2
0657 Oslo

Tel - 64925691 - Mob - 95881223
anto-b@online.no
www.tamilbaptist.net


# சபையின் தரிசனம்

தமிழ் கிறிஸ்தவ சகோதரர்கள் ஒன்றுகூடி கர்த்தரை ஆவியோடும், உண்மையோடும் தொழுதுகொள்ள, கிறிஸ்துவை தலையாகவும் தன்னைச் சரீரமாகவும் கொண்ட ஆவிக்குரிய வல்லமையுள்ள ஐக்கிய சபையைக் கட்டுதல்.

(எபேசியர் 2:21,22 )

ஒஸ்லோவிலும் நோர்வே தேசமெங்கும் கிறிஸ்துவையும் அவரது அன்பையும் அறியாது வாழும் தமிழ் மக்களுக்கு, பாவம், வேதனை, துன்பம், என்பவற்றிலிருந்து விடுபட கர்த்தராம் கிறிஸ்துவையும் அவரது நற்செய்தியையும் அறிவித்து, சத்தியத்தில் வழிநடத்துதல்.

(லூக்கா 24:47,48)

அநாதைக் கோலம் கொண்டுள்ள இலங்கை தேசத்தையும், கைவிடப்பட்ட மக்களிலும் பாரம் கொண்டு, இலங்கையிலும் அயல் தேசத்துக் கிராமங்களிலும், சமாதானத்தின் சுவிஷேச வாசல் திறக்கப்படும்படியாக சமூகநல, சுவிஷேசப் பணிகளையும், ஊழியங்களையும் தாங்குதலும் ஆரம்பித்தலும்.

(ஏசா 62:2)



# நிச்சயமாகவே உனக்கு வெற்றி உண்டு...

கர்த்தராம் இயேசுக் கிறிஸ்துவின் நாமத்தில் புதுவருட வாழ்த்துக்கள். 21ம் நூற்றாண்டில் ஒரு புதிய சாகாப்தத்திலே ஜெயத்துடன் காலடி எடுத்து வைத்திருக்கும் இத்தருணத்தில், புதிய ஆண்டின் புதிய நம்பிக்கை, புதிய எதிர்பார்ப்புகளுடன் கடந்து வந்திருக்கும் உங்களை 'விடுதலை சஞ்சிகை' ஊடாக மறுபடியும் உங்களை சந்திப்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

நம் தேவன் நமக்கு எப்போதுமே நல்லவராகவே இருக்கிறார். அவர் கடந்து போன வருடங்களை விட இந்த வருடத்தை நன்மையினால் உங்களுக்கு முடி சூட்டுவார். இந்த வருடமாகிய 2010 ஐ நம் திருமுழுக்கு சபைக்கு ஜெயத்தின் ஆண்டாக பிரகடனப்படுத்தியுள்ளார். ஜெயத்தின் அல்லது வெற்றியின் ஆண்டு என்றதுமே, எல்லாவற்றிலுமே, அதாவது எதில் எல்லாம் ஜெயம் அல்லது வெற்றி வரப்போகிறது என்று நாம் அங்கலாய்த்து அங்குமிங்குமாக தேடி ஓட வேண்டிய அவசியமில்லை. ஏனெனில் தேவனுடைய வாக்குத்தத்தம் கூறுகிறது போல குதிரை யுத்த நாளுக்காக ஆயத்தமாக்கப்படும்; ஜெயமோ கர்த்தரால் வரும். நீதி31:21

இவ்வாக்கின் படி யுத்தம் உண்டு. ஆனால், ஆயத்தம் நம்முடையதாகவும் ஜெயம் கர்த்தருடையதாகவுமே இருக்கிறது. வெற்றி வேண்டுமானால் போராட்டங்களை சந்திக்க வேண்டியது அவசியமே. நம் நாளாந்த வாழ்வில் போராட்டங்கள், உபத்திரவங்கள், தனிமைகள், துக்கங்கள், கடன்கள், நோய்கள் போன்ற போராட்டங்களை சந்திக்கிறோம். ஆனால் அவற்றில் போராடியும் தோற்றவர்களைப்போல் சோர்ந்துவிடுகிறோம்.



நாளடைவில் இந்த சோர்வே நம்மை அழித்து விடுவதற்கு மலை போல் வளர்ந்துவிடுகிறது. இவ்வகையான சூழலில் தங்களையே வெறுத்து, விரக்தி நிலையில் வேண்டாம் வேண்டாம் என்று நம்மில் அநேகர் இவ்வுலக வாழ்க்கையை வெறுத்த நிலையில் உள்ளோம். ஏன் இப்படியாயிருக்கிறோம் இந்த உலகத்தையும் இவ்வுலக சூழ்நிலையையும் வெல்ல முடியாததா, எவராகிலும் இவ்வுலக நியதியை ஜெயித்தார்களா? என்று கலங்கிக் கொண்டு காத்திருக்கும் மகனே! மகளே!

உன் கலக்கத்திற்கு ஓர் கலங்கரை விளக்காக இயேசு எனும் தெய்வமுண்டு. ஆம்! அவர்தான் இந்த உலகத்தில் எந்நிலைகளிலும் எல்லாப் பாடுகளிலும் எந்தச் சூழ்நிலைகளையும் ஜெயித்தவர். அவர் உனக்கு ஓர் உண்மையைச் சொல்லிவிட்டுப் போனார்...இவ்வுலகத்தில் உபத்திரவம் உண்டு ஆனாலும் திடன் கொள்ளுங்கள். ஏனெனில் நான் உலகத்தை ஜெயித்தேன் என்பதுதான் அது.

நாம் இந்த உலகை வென்ற இயேசு தெய்வத்தை நம்பி அவர் வழிக-

ளில் செல்வோமானால் இவ்வுலகையும், இவ்வுலகத்தின் நியதிகளையும் ஜெயிப்பது நிச்சயம்.

நீ வெற்றி பெற வேண்டுமானால் போராட வேண்டியது அவசியம். நம் சுய பெலத்தில் போராடுவோமானால் தோற்றுப் போவோம். சோர்ந்து மடிந்துவிடுவோம். ஆனால் ஜெயம் கொண்ட தேவன் இயேசுவைப் பின் தொடர்வோமானால் நம் நாளாந்த வாழ்வில் நாளுக்கு நாள் வெற்றி நடை போடுவது நிச்சயம்.

ஜெயம் கர்த்தருடையதுதான்! ஆனால் போராட்டம் நம்முடையது என்பதை நாம் யாரும் மறந்து போக வேண்டாம். நாம் போராட வேண்டும் என்னும் போதும் சோர்ந்துவிடவும் வேண்டாம். நாம் தனித்து போராட வேண்டிய அவசியமில்லை. ஏனெனில் பரிசுத்த வேதாகமம் சொல்கிறது இயேசு கிறிஸ்து 'தாமே சோதிக்கப்பட்டுப் பாடுகள் பட்டதினாலே, சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவி செய்ய அவர் வல்லவராயிருக்கிறார்.' எபிரேயர் 2:18

இவ்வுலகின் பாடுகளையும் சோதனைகளையும் வென்றவர்தான் இவ்வுலக வழக்கத்திலிருந்து நாம் ஜெயமெடுக்க, வழிகாட்ட முடியும். போராட்டங்களோடு கடந்து கொண்டிருக்கும் அன்பு சகோதரனே!சகோதரியே! ஆம் அன்பு தெய்வம் இயேசு, அவரை நேசித்து பின் தொடரும் யாவருக்கும் வைத்திருக்கும் வெற்றியை உனக்கும் தர ஆவலாயிருக்கிறார். தாமதமேன்?! அவரை விசுவாசிக்கிற யாவருக்கும் ஜெயமே!

'நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்'

(1 யோவான் 5:4)

உங்கள் அன்பு ஊழியன்
அன்ரன் சின்னத்தம்பி

# உனக்காக...

பாலன் பிறந்தார் - நமக்காக
பாரினில் வந்தார் - எமக்காக
பார்த்து நாமும் நன்றாக - அவர்
பாதையில் நடப்போம் ஒன்றாக

பாவம் தீர்த்தார் நமக்காக
பாசமாய் அணைத்தார் நிறைவாக
பரலோகில் சேர்வோம் ஒன்றாக
பார்த்து மகிழ்வோம் நன்றாக

பாலன் வந்தார் ஒளியாக
பார்க்க வந்தனர் பலராக
பாவி என் பாவ மீட்புக்காக
பாதாளம் இருந்து மீட்டார் எனக்காக

பாலன் இயேசுவைப் பார்ப்போமே
பார்த்தால் என் பாவம் நீங்குமே
பாவி நீயும் வருவாயா உனக்காக
பார்த்து பலனை அடைவாய் நிறைவாக

பார்க்க வருவீர் உமக்காக
பாவம் தீரும் முற்றாக
பாராத மக்கள் தீரா குறைவாக
பார்த்த நானும் அடைந்தேன் நிறைவாக

நானும் சொன்னேன் உனக்காக
நித்திய வாழ்வின் மகிழ்ச்சிக்காக
தேடுவீர் இயேசுவை உனக்காக
வாழ்வீர் நித்திய மகிழ்ச்சிக்காக


சகோதரி. புஷ்பா



# தொடரும் எம் சபையின் வரலாற்றில் ஓர் கண்ணோட்டம்...

கர்த்தருக்கே மகிமையும் கனமும் உண்டாவதாக! இவ்விடுதலையின் ஆண்டிலே மீளவொருமுறை எமது 'விடுதலை' சஞ்சிகையூடாக உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறோம். 'நான் உன்னை காண்கிற தேவன்' என்று வாக்களித்த கர்த்தர் வாக்கு மாறாதவராக அதனை எமது தமிழ் திருமுழுக்குச்சபையிலே இந்த 2009 ம் ஆண்டுடன் அதனது எட்டு வருடங்களைக் கடக்கப்பண்ணினார்.

'நான் உன்னோடே இருந்து... நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன்.... நீ என்னைக் கனப்படுத்துவாய்' என்ற வாக்குறுதியானது இக்குறுகிய காலப்பகுதியில் எமது சபையை அதன் பெரிய இலக்குகளை அடைய உதவிற்று என்றே சொல்லவேண்டும். சொன்னதை செய்திடும் சர்வ வல்லவர் எம்மோடு இருக்கும் வரை இச்சபையும் கழுகைப்போல தனது செட்டைகளை அடித்து பலமாக எழும்பும் என்பதே எமது விசுவாசமாகும்.



இந்த ஒஸ்லோ நகரத்தில் பல்வேறு ஆவிக்குரிய கிறிஸ்தவ சபைகள் காணப்பட்டாலும், ஆத்தும ஆதாயம் தீவிரம் காணும் ஒரு சபை எமது என்பதில் கர்த்தருக்குள் மகிழும் பாக்கியம் இந்நாட்களில் எமக்கு கிடைத்து வருகின்றது.
ஒவ்வொரு ஞாயிறு ஆராதனைகளிலும் சராசரியாக 1-2 புதிய ஆத்துமாக்கள் இரட்சிப்பின் செய்தியை ருசிபார்க்கும் பாக்கியமானது தற்போதைய எமது விசுவாசக்குடும்பம் ஏறத்தாழ 120 ஆக உயர்ந்துள்ளது. இவ்வாண்டில் விடுதலையை ருசிக்கிறவர்களாக மட்டுமன்றி மற்றவர்களையும் விடுதலையாக்கி இயேசு இரட்சகரண்டை கொணரும் உத்வேகம் சபையாரிடையில் பற்றியெரிகின்றது.

கடந்த யூலை மாதத்தில் இடம்பெற்ற நோர்வேஜிய திருமுழுக்கு சம்மேளன பொது மாநாட்டில் எமது வாலிபர்கள் வழங்கிய சாட்சி, வழிபாடு மற்றும் கலைநிகழ்ச்சிகள் பெரு வரவேற்பைப் பெற்றதுடன் அநேகரை கர்த்தருக்குள்ளாக தொட்டமை ஒரு பெரிய அதிசயமாகும். எமது பேரன்பிற்குரிய மேய்ப்பன் அன்ரன் சின்னத்தம்பி அவர்கள் நோர்வேஜிய திருமுழுக்கு சம்மேளணக் கூட்டு நிர்வாகிகளில் ஒருவராக தெரிவு செய்யப்பட்டமை, எமது சபையின் மீது கர்த்தரின் தயவு இருப்பதை மீண்டும் வெளிக்காட்டிற்று. எமது மேய்ப்பன் அவர்களே அக்குழுவில் நியமிக்கப்பட்டுள்ள நோர்வேஜியர் இல்லாத ஒரேயொரு முதலாவது வெளிநாட்டவர் என்பது முக்கியமாக குறிப்பிடத்தக்கது.

அதைத்தொடர்ந்து ஆகஸ்ட் மாதத்தில் வழமை போல எமது சபையின் வருடாந்த வசந்தகால முகாம் சுவீடன் நாட்டு எல்லையில் உள்ள அழகானதோர் இடத்தில் நடைபெற்றது. 5 நாட்கள் நடைபெற்ற அந்த ஒன்று கூடல் பலரது வாழ்வின் திருப்புமுனை என்றே சொல்ல வேண்டும். கர்த்தர் மீளவும் எம்மை ஒன்று கூட்டி எம்மிடையே உலாவிக் கிரியை நடப்பித்ததை எம்மில் யாராலும் மறக்க முடியவில்லை. ஆவியானவருடைய அபிஷேகத்தால் நாம் நீந்த மூழ்கியது ஒரு புதிய பரவசம்! சபையார் அனைவரும் ஒருவரையொருவர் விட்டுக்கொடுத்து ஒருமனப்பட்டது கர்த்தருடைய ஒரு பெரிய கடாட்சம்!!

வசந்தகால முகாம் முடிவுற்ற அடுத்த தினங்களில் எமது 'திறந்த வாசல் வேதாகம கல்லூரி' வகுப்புக்கள் வழமைபோல ஒஸ்லோவில் தொடங்கின. அதன் நிர்வாக இயக்குனர்களான ஜேர்மன் தேசத்திலுள்ள ஊழியர்கள் திரு.திருமதி பிரேம்குமார் தம்பதியர் இதை ஒழுங்கு செய்திருந்தார்கள். இருவரும் எம்முடன் வசந்தகால முகாமில் கூடியிருந்தது எமக்கு பன்மடங்கு உற்சாகம் தந்திருந்தது. பாடங்களை நெறிப்படுத்த லண்டன் நகரிலிருந்து எமது அருமைப்போதகர் சீசரும் குடும்பத்தாருடன் கூட வந்திருந்தார்கள். இம்முறை எமது சபையின் வாலிபர்கள் ஏறத்தாழ 25 பேர் முதலாண்டு வேதாகமபாடம் படிக்க தம்மை ஒப்புவித்தது சபையின் வரலாற்றில் ஒரு பெரிய திருப்புமுனையாகும். வசந்தகால முகாமின் அநுபவம் பலரை ஞானஸ்நானத்தினுள் வழிநடத்தியது மட்டுமன்றி மேலும் கர்த்தரின் வார்த்தைகளை முறைப்படி கற்க ஏவிற்று என்பது கர்த்தருடைய கிருபையே ஆகும். தொடர்ந்த 5 நாட்களும் எல்லாருமாக இருந்து

கற்றுக்கொண்ட பழகிக்கொண்ட, பகிர்ந்துகொண்ட அந்நியோந்நியம் இலகுவில் மறக்க இயலாது. இச் சாதனையின் உச்சக்கட்டமாக பாடம் கற்ற அனைவரும் சிறப்பாக சித்தியெய்தியது, மற்றவர்களையும் அடுத்தடுத்த ஆண்டுகளில் வேதத்தை முறைப்படி கற்கத் தூண்டியுள்ளது. இவ்வாண்டின் மிகப்பெரிய சாட்சிகளில் இதுவும் ஒன்றென்றால் மிகையாகது. ஏனெனில் இம்முறை பாடுங்கள் முதன்முதலாக தமிழிலும்; நோர்வேஜிய மொழியிலும் கற்பிக்கப்பட கர்த்தருடைய ஞானம் உதவிற்று! அவருக்கே மகிமையுண்டாவதாக!!

எமது சபையின் மிஷனெரிப் பணிகளும் இவ்வாண்டில் விருத்திகண்டுள்ளது. ஒக்டோபர் மாதப்பகுதிகளில் எமது இந்தியா தேசத்துக்கான பணிகளில் ஒரு முக்கியகட்டமாக நான்கு பேர் ஊழியத்திற்கென அங்கு அபிஷேகிக்கப்பட்டமை தமிழ் திருமுழுக்கு சபையின் பணிகளுக்கு ஒரு மகுடம் வைத்தது. இலங்கையின் போர்ச் சூழலால் அவதியுறும் அகதி வாழ் மக்களுக்கு எம்மாலியன்ற உதவிகள் மென்மேலும் செய்தும் வருகின்றோம். பெரிய இருதயமுள்ளசிறியசபையாகநாம்இருந்துகாரியங்கள் செய்ய எபெனேசராகிய எம் தெய்வம் உதவிவருகிறமை ஒரு ஆச்சரியமமான உண்மையாகும். இம்முறை இவ்வூழியப்பணிகளுக்காக எமது அருமைப்போதகர் அன்ரனுடன் சபையின் மூப்பர்களில் ஒருவரான சகோ:நேசனும் இலங்கை இந்திய நாடுகளுக்கு சென்றிருந்தமையை குறிப்பிட்டாக வேண்டும்.

ஒக்டோபர் மாதப்பகுதியில் விஷேடமாக வாலிபர்க்கென ஓர் சிறப்பான இலையுதிர்கால வாலிபர் முகாம் இடம்பெற்றது. சபையின் ஆரம்ப நாட்களில் இருந்ததை விட பன்மடங்கு விருத்தி பெற்றுள்ள எமது வாலிபர் தொகை, சபையை அதன் முதுகெலும்பைப்போல தாங்கி வர கர்த்தருடைய கரம் நீட்டப்பட்டிருப்பதும் அவருடைய கிருபையே!

இவ்வாண்டின் எமது சபையின் முக்கிய மைல் கல்லான, விடுதலை fm இணைய வானொலியின் வளர்ச்சியானது குறுகியதொரு காலகட்டத்தினுள் உலகின் பல மூலைகளிலும் இருந்து அதிகபட்ச நேயர்களைச் சம்பாதித்தது. எமது இலங்கை தேசத்தின் விடுதலைக்காக பாரபட்டு அதிக நிகழ்ச்சிகளை ஒலிபரப்பவும் கர்த்தர் பெரிய காரியம் செய்தார். மேலும் இலங்கையின் நிலவரத்தைமையப் பொருளாகக் கொண்டு டிசம்பர் மாதம்11ஆம் திகதி 24 மணிநேர தொடர் நேரலை ஒலிபரப்பை வெற்றிகரமாக செய்யவும் தேவன் கிருபை செய்தார். இந்த காரியங்களுக்காக தம்மை ஒப்புவித்திருக்கும் எமது சபையின் பிள்ளைகளுக்காகவும் தேவனை நன்றியுடன் துதிக்கிறோம்.

இவை எல்லாவற்றிற்கும் கட்டியம் கூறும்விதமாக, ஒஸ்லோ நகரில் மிக அண்மையில் இடம்பெற்ற சகல திருச்சபைகளுக்குமான பொதுக்கூட்டத்தில் 'வளர்ந்து வரும் வெளிநாட்டு ஆவிக்குரிய கிறிஸ்தவ சபைக்கான' முன்மாதிரிகைப்பாராட்டு எமக்கு கிடைத்தமை. எமது சபையுடன் கர்த்தரின் சமூகம் இருப்பதனை வெளிப்படுத்திற்று! அத்துடன், சபையின் தமிழ்பாடசாலைப் பிரிவும் சிறப்பாக செயற்படுவதற்கு கர்த்தர் கிருபை செய்கின்றார். மேலதிக ஆசிரியர்கள் அதற்காக தம்மை அர்ப்பணிக்க முன்வந்துள்ளமை, இப்பணியை மெருகூட்டுவதாக உள்ளது. உதித்திருக்கும் புதிய ஆண்டிலே இக்கல்விப்பணியும் நல்லதொரு எட்டத்தைத் தொடும் என்பது எமது உறுதியான விசுவாசமாகும்.

'பாதாளத்தின் வாசல்கள் சபையை மேற்கொள்வதில்லை.' இந்நாள் வரையும் தேவனுடைய சுத்தக்கிருபையே எம் சபையை தாங்கி வருகின்றது. நாம் எப்போதும் எமது கடந்தகாலங்களை நினைத்து தேவனைத் துதிக்கின்றோம். யோவேல் 2:22ல் சொல்லப்பட்டபடியே கர்த்தர் இவ்வாண்டு அருளிய வாக்குத்தத்தம் சபையுள்ளேயும், அதன் வெளிச்செயற்பாடுகள் அனைத்திலும் பெரிய விடுதலையையும், நல்விளைவுகளையும் உருவாக்கியுள்ளது.

சின்னஞ் சிறிய கையளவு மேகம் பெருமழையை உருவாக்கின வேத வரலாறு எமது சபையின் அடிநாதமாக ஜொலிக்கின்றது. எமது சபை அதன் மிஷன் ஊழியப்பணிகளுக்காக இன்றுவரை ஏறத்தாழ 240,000 குரோணர்களை பயன்படுத்தியிருப்பது சபையின் மொத்த உறுப்பினர் தொகைக்கு சவால்விடும் விடயமாகும். இது கர்த்தரின் அதிசயமே! அவருக்கே மகிமையும் கனமும் உண்டாவதாக!!

இச்சஞ்சிகையூடாக மீளவும் உங்கள் அனைவரையும் சந்திக்கும் வரை கிறிஸ்து இயேசுவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்களுடன் வெற்றியின் வருடமாம் 2010ம் ஆண்டிற்குரிய நல்வாழ்த்துதல்களையும் தெரிவிக்கின்றோம். கர்த்தராகிய ஆண்டவருக்கே எல்லா மகிமையும் ஸ்தோத்திரங்களும் உண்டாகட்டும்!!

சகோதரி. கொன்சில்டா பிரசாத்



# ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு...

எனக்கன்பானவர்களே!

இயேசுக்கிறிஸ்துவின் இனிய நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்கள்.

தேவன் ஒளியாக இருக்கிறார். அவரில் எவ்வளவேனும் இருள் இல்லை. சூரியபிரகாசத்திலும் அதிக ஒளியை உடையவராய் இருக்கிறார். ஆனபடியினாலே எந்த ஒளியுடனும் ஒப்பிட முடியாத மற்ற ஒளிகளுடன் சேரக் கூடாத ஆச்சரியமான ஒளியை உடையவராய் இருக்கிறார். ஒருவராய், சாவாமையுள்ளவரும், சேரக்கூடாத ஒளியில் வாசம்பண்ணுகிறவருமாய் இருக்கிறாரென பரிசுத்த வேதாகமம் நமக்கு போதிக்கிறது.

ஆதியிலே வானத்தையும் பூமியையும் படைத்த ஆண்டவர் ஆழத்திலே இருள் இருந்ததால், வெளிச்சத்தை உண்டாக்கி வெளிச்சம் நல்லதென்று கண்டுகொண்டார். ஆனால் மனுஷனோவென்றால் ஒளியை வெறுத்து இருளை விரும்பியதால் ஒளிப்பிடத்தில் வாழ்ந்து பாவம் என்கின்ற இருளினால் தன்னை மூடிக்கொண்டிருக்கிறான். பாவம் மிகவும் கொடியது. அதின் கூர் மரணம் என்று சொல்லப்படுகிறது. பாவம் வஞ்சனையுள்ளது. அது அழகாக நமக்கு காட்சி தந்து நம் உயிரை குடித்து விடுகிறதாய் இருக்கிறது. அது நம்மை தந்திரமாக தன் வலையில் வீழ்த்திவிடும் வல்லமையுள்ளது. அக்கினி கடல் என்னும் நரகத்திலே மனிதனைத் தள்ளிவிட அதின் தந்திரம் மிகவும் பெரியது.

ஆதலால் பாவத்தைக் குறித்து அறிய நம் புத்தி போதாது. நம் அறிவும் குறைவுள்ளது. பாவத்தை அறிகிற அறிவை நாம் அறியக்கூடாதபடிக்கு இப்பிரபஞ்சத்தின் அதிபதியென அழைக்கப்படுகிற பிசாசனவன், தேவனின் மகிமையின் அறிவாகிய ஒளி நம் இருதயங்களில் பிரகாசிக்காதபடிக்கு நம் எல்லோருடைய மனக் கண்களையும் குருடாக்கி வைத்திருக்கின்றான் என வேதம் நமக்கு தெளிவாக விளக்குகிறது.

கண்களின் இச்சையும், மாம்சத்தின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமே நம் எல்லோரையும் பாவம் செய்யத் தூண்டுகிறது. ஆதலினாலே வேதம் விளம்புவது என்னவெனில், நம் கண்ணாது சரீரத்தின் விளக்காயிருக்கிறதென்றும், நம் கண் தெளிவாயிருப்பின் சரீரம் முழுவதும் வெளிச்சமாயிருக்கும் என்பதே. ஆனால் நாம் எதையுமே இச்சையோடே பார்ப்போமாயின் அதை அடையவேண்டும்



அல்லது அதை நமதாக்கிக் கொள்ள வேண்டுமென இச்சையானது நம்மை தூண்டுகிறதாயிருக்கிறது. அதே போலவே ஜீவனத்தின் பெருமையும் நாம் மற்றவர்களைவிட உயர் நிலையில் சமூகத்தில் மதிக்கப்படுகிற பெருமையான வாழ்க்கையினால் நம் கண்களைக் குருடாக்கிவிடுகிறது.

ஆதலால் ஏழைகள் அசட்டை பண்ணப்படுகிறார்கள். அவர்கள் ஒடுக்கப்பட்டு அவர்களது நியாயம் கேட்கப்படாமலே போகின்றது. ஆனால் தேவனோ ஏழைகளையும் நான்தான் உண்டாக்கினேன். ஏழைகளை பரிகசிப்பவன் என்னை பரிகசிக்கிறான் என்கிறார். தேவன் ஒருவனை ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதம், அது ஏழைகளின் களஞ்சியமாயிருக்கிறது. அந்த களஞ்சியத்திலிருந்தே அவர் ஏழைகளை போஷிக்க சித்தமாயிருக்கிறார். இதை மனுஷன் அறியாது இருப்பது நல்லதல்ல.

முறையிடுகிற எழையையும் திக்கற்ற பிள்ளைகளையும் உதவியற்றவனையும் இரட்சித்தேன்; கெட்டுப்போக இருந்தவனுடைய ஆசீர்வாதம் என் மேல் வந்தது; விதவையின் இருதயத்தை கெம்பீரிக்கப் பண்ணினேன் என்று தேவ ஆவியினவர் யோபு என்னும் பரிசுத்தவானைக் கொண்டு பரிசுத்த வேதாகமத்திலே எழுதி வைத்திருக்கிறார். (யோபு 29:12-13) ஆனால் நம்மில் யார் யோபுவைப் போல சொல்லக்கூடும்

ஏழைகளின் ஆசீர்வாதம் நம்மில் தங்குகிறதாயிருக்கிறது. அவர்களுக்காகவே தேவன் நம்மை ஆசீர்வதிக்கிறார். நாங்களோவென்றால் இவைகள் எல்லாம் நம்முடையது; நமக்காகவே என்று பெருமைபாராட்டி தேவ நீதியை அறியாது வாழ்ந்து வருகி றோம். ஆனால் தேவனோ, நன்மைசெய்யப் படியுங்கள்; நியாயத்தைத் தேடுங்கள்; ஒடுக்கப்பட்டவனை ஆதரித்து, திக்கற்றப்பிள்ளையின் நியாயத்தையும், விதவையின் வழக்கையும்

விசாரியுங்கள் என்கிறார்.(ஏசா 1:17).
ஒருவன் நன்மை செய்ய அறிந்தும் அதை அவன் செய்யாதே போனால் அது பாவம் எனப்படுகிறது. (யாக் 4:17). நம் கடின உழைப்பினால் நாம் ஐஸ்வரியத்தை சம்பாதித்தோம் என்றும் ஏன் நம்முடையதை மற்றவர்களுக்கு கொடுக்க வேண்டுமென்று நம்மில் பலர் நினைக்கிறார்கள். ஆனால் தேவனே நமக்கு ஐஸ்வரியத்தை சம்பாதிக்க பெலத்தை தருகிறார் என்பதை அறியாதே போகிறார்கள்.

இப்படிப்பட்ட மேலான அறிவை, அதாவது தேவனை அறிகிற அறிவை நாம் பெற்று அவருடைய வெளிச்சத்திலே வெளிச்சம் காணுவோமானால், எங்களுக்கென நாம் வாழாமல் மற்றவர்களின் சந்தோஷத்தில் சந்தோஷம் காண்கிற உன்னதமான ஓர் வாழ்வை நாம் வாழ முடியும்.

அதையே தேவன் நம்மிடம் எதிர்பார்க்கிறார். நம் சுயநல வாழ்க்கையில் பாவம் இருக்காமல் போகாது. பிறர்நலம் கருதுவதே நம் பிறப்பின் முக்கியமாயிருக்கிறது. அதற்காகவே தேவன் நமக்கு ஜீவனைத் தந்திருக்கிறார். தேவன் நமக்குத் தந்த ஜீவனில் நன்மை வாசமாயிருக்கிறது என்பதை தேவனே நமக்கு வெளிப்படுத்தாவிட்டால், அது நமது அறிவுக்கு எட்டாதது. (பிரசங்கி ௬:௧௨). ஆனால் இந்த ஜீவன் நன்மை செய்து அது நித்திய ஜீவனை அடைவதே தேவ இரகசியமாயிதருக்கிறது. இந்த இரகசியத்தை நம் அறிவினால் விளங்கிக் கொள்ள முடியாது. நம் ஜீவன் ஒளியைக் காண வேண்டும். அது ஜீவ ஒளியை அடைய வேண்டும். அப்பொழுதுதான் நம் கண்கள் திறக்கப்பட்டு நாம் நன்மையானவைகளை சிந்திப்போம். நித்திய ஜீவனைக் கண்டடைவோம்.

இந்த அறிவு நமக்கு எட்டாததும், இருளில் இருக்கும் நமக்கு அது தூரமுமாயிருக்கிறது. ஆகவேதான் தேவன் தம்முடைய ஆச்சரியமான ஒளியிடத்திற்கு ஒவ்வொருவரையும் அழைக்கிறார். அதற்காகவே தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரன் இயேசுக்கிறிஸ்துவை நன்மை செய்வதற்கு மாதிரியாக நமக்கு தந்தருளினார். 'நற்கிரியைகளைச்செய்யப் பக்திவைராக்கியமுள்ளவர்களாகவும் நம்மைச் சுத்திகரிக்கும்படி, நமக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்.' (தீத்து ௨:௰௪)

நன்மை அறியாத நம் ஜீவனை பிரகாசிக்கச் செய்யும் படியாகவே இவ்வுலகத்தில் ஒளியாக வந்தார். நாமும் கூட தீமைக்கு பேதைகளாகவும் நன்மைக்கு ஞானிகளாகவும் இருந்து இருளிலே இருக்கிற ஜனங்களுக்கு வெளிசத்தைக் கொடுப்போம் விடுதலையைக் கூறுவோம்.

சகோதரன்: புதியவன்

# சிந்திக்க சீர்திருந்த...

கப்பலுக்குரிய பகுதி கடல்,
நெஞ்சத்திற்குரிய பகுதி தியானம்.

குழி தோண்டுகிறவனே அதில் வீழ்வான்.
சோர்வடையாதவன் வெற்றியடைவான்.

அன்பான சொல்லானது: மருந்தாக
இருப்பதோடு வாழ்த்தவும் செய்கிறது.
கவலைக்கு மருந்து அதைக் காலின் கீழ்
போடுவதுதான்.

சமாதானம் செய்துவைப்பவர் ஒரு போதும்
தோல்வியடைந்ததில்லை.

நாவில் எலும்புகள் கிடையாது: ஆனால்
அது எலும்புகளை நொறுக்க வல்லது.

துன்பத்தை அனுபவித்த காலத்தை
மறந்து விடு: ஆனால் அது உனக்குக் கற்பித்த
பாடத்தை மறந்துவிடாதே.

கேட்டாலேயொழிய யோசனை சொல்லாதே.

தலையைக் காட்டிலும் - உன் நாவுக்கு
விடுமுறை கொடு.

எவன் ஒருவன் புகழை வெறுக்கிறானோ,
அவனுக்கு உண்மையான புகழ் தானாக
வந்தடையும்.

நமக்குப் பாரமாக இருப்பவர்களை நாம்
மன்னித்து விடலாம். நாம் பிறருக்குப் பாரமாக
இருப்பது மன்னிக்க முடியாத குற்றம்.

பணத்தை இழந்தால் சொற்ப நஷ்டம்,
நேரத்தை இழந்தால் எல்லாமே நஷ்டம்.



சகோதரன்: ஏசாயா பொன்நேஸ்


குதிரை யுத்தநாளுக்கு ஆயத்தமாக்கப்படும்; ஜெயமோ கர்த்தரால் வரும்.

# WHO IS JESUS?

## HE IS JESUS WHO IS HE?

**IN CHEMISTRY,**
He turnes water to wine.

**IN BIOLOGY,**
He was born without the normal conception;

**IN PHYSICS,**
He disproved the law of gravity when he ascended into heaven;

**IN ECONOMICS,**
He disproved the law of diminshing return by feeding 5000 men with two fishes & 5 loaves of bread;

**IN MEDICINE,**
He cured the sick and the blind without adminstering a single dose of drugs,

**IN HISTORY,**
He is the beginning and the end;

**IN GOVERNMENT,**
He said that he shall be called wonderful counselor, prince of peace;

**IN RELIGION,**
He said no one comes to the father expect through him;



## SO, WHO IS HE? HE IS JESUS!

REMAIN IN GOD AND SEEK HIS FACE ALWAYS. AMEN IN GOD I'VE FOUND EVERYTHING!

Jesus had no servants, yet they called Him Master.

Had no degree, yet they called Him Teacher.

Had no medicines, yet they called Him Healer.

He had no army, yet kings feared Him. He won no military battles, yet He conquered the world.

He committed no crime, yet they crucified Him.

He was buried in a tomb, yet He lives today.

I feel honored to serve such a Leader who loves u! s!

By: John



# என் தேவனாகிய கர்த்தரின் பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம்...



என் தேவனாகிய கர்த்தரின் பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம்

கடந்த ஆறு வருடங்களாக கர்த்தர் எம் குடும்பத்திற்கு எதிராக வந்த தீமையான காரியங்கள் அனைத்தையும் நன்மையாக மாற்றினார். எமது சாட்சியை எழுதுவதற்கு ஒரு புத்தகம் போதாது. ஆனாலும் கர்த்தரின் நாமம் மகிமைப்பட வேண்டும் என்பதற்காகவும் அவருக்கு நன்றி சொல்கிறேன்.

இந்த நோர்வே தேசத்திலிருந்து 2005 ஆம் ஆண்டு 11 ஆம் திகதி நவம்பர் மாதம் விசா எனக்கு இல்லாதபடியால் இலங்கைக்கு திருப்பியனுப்பினார்கள். எனது மனைவி பிள்ளைகள் மூவரையும் இங்கே விட்டுப் பிரிந்து மிகவும் மனபாரத்தோடும் கண்ணீரோடும் இலங்கை தேசத்தில் காலடி எடுத்து வைத்தேன். அங்கே சென்ற நாட்கள் முதல் கொண்டு ஜெபிப்பதற்கு முழங்கால்படியிட்டால் என்னால் ஜெபிக்க முடியாமல் கண்ணீரோடு இருப்பேன். சில சமயம் மனைவி, பிள்ளைகள், இவர்களுடைய எதிர்காலங்கள் இவற்றைப்பற்றி எனது மாம்ச சிந்தையில் பல கோணங்களில் சிந்தனைகளும், கேள்விகளும் வந்து என்னை இக்கட்டான சூழ்நிலையில் கொண்டு போய்விடும்.

அச்சமயங்களில் பரிசுத்த வேதாகமத்தைப் படிக்கத் திறந்தாலும் என்னால் படிக்க முடியாமல் கஷ்டப்படுவேன். அந்நேரத்தில் தான் நான் 2004 ஆம் ஆண்டு ஞானஸ்நானம் பெற்றபோது நோர்வே திருமுழுக்குச் சபையால் எனக்குத்தரப்பட்ட வாக்குத்தத்தம் 'நான் உனக்குக் கட்டளையிடவில்லையா? பலங்கொண்டு திடமன தாயிரு; திகையாதே, கலங்காதே, நீ போகும் இடமெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார்'. (யோசுவா 1:9) இவ்வாக்குத்தத்தம் தான் எனது துன்ப வேளைகளில் பெலனடையச் செய்தது. இதை வைத்தே தினமும் ஜெபிப்பேன்.

என்னை இலங்கைக்குத் திருப்பியனுப்பியவுடன் நோர்வே அரசாங்கம் எனது மனைவி பிள்ளைகளுடைய விசாவையும், மனைவியின் வேலை செய்யும் அனுமதிப்பத்திரம் எல்லாவற்றையும் தடைசெய்தது. அதனால் இன்னும் அதிகமாக பாதிக்கப்பட்டேன். அத்தோடு இலங்கையிலிருந்த போது உற்றார் உறவினர், தெரிந்தவர்கள், இவர்களுடைய வினாக்கள் பதில்கள் மென்மேலும் என்னை சோர்வுக்குள் கொண்டுவரும். ஏனெனில் எம்முடைய உறவினர்கள் யாவரும் றோமன் கத்தோலிக்கர் என்றபடியால் அவர்கள் எனக்கு கூறுவார்கள் நீ பைபிளுக்குள் மாறின படியால் தான் உனக்கு இப்படி நடந்தது. நீ இங்கே, உன் மனைவி பிள்ளைகள் நோர்வேயில். நீ போவது கஷ்டம். நீ அங்கே 9 வருடங்கள் விசா இல்லாது இருந்தபடியால் இன்னும் 9 வருடங்கள் முடியத்தான் உனக்கு விசா தருவார்கள். சில சமயம் உனது பிள்ளைகள் மனைவியை திருப்பி அனுப்பிவிடலாம் என்று. இப்படி பலவிதமான கேள்விகளையும் பதில்களையும் சொல்லுவார்கள். ஆனால் நான் அவர்களுக்கு கூறும் பதில் ஒன்றே தான் கர்த்தருக்கு எப்போ சித்தமோ அப்போ நான் போவேன் என்று! ஆனாலும் வீட்டிற்கு வந்து கண்ணீரோடு அழுது ஜெபிப்பேன்.

அச்சமயத்தில் நான் இலங்கையிலே சென்று கொண்டிருந்த 'பெலதெல்பியா' சபையில் 2007 ஜனவரி 1ம் திகதி அவ்வருடத்திற்கான தனிப்பட்ட ஒவ்வொருவருக்கும் வாக்கத்தத்தம் கொடுத்தார்கள். அதில் எனக்கு கிடைத்தது. ' நான் உனக்கு முன்னே போய், கோணலானவைகளைச் செவ்வையாக்குவேன் ' (ஏசாயா 45:2). 2007ம் ஆண்டு அன்று தொடக்கம் இதையே வைத்து கொஞ்சம் வித்தியாசமாக ஜெபிப்பேன். நீர் எனக்கு முன்னே போய் கோணலானவை யாவற்றையும் செவ்வையாக்குவீர் என்று.

11.11.2007 ஆம் திகதி எனது மனைவி தொலைபேசி மூலம் எனக்குச் சொன்னா தடைசெய்யப்பட்டிருந்த எமது வீசா வேலை அனுமதிப்பத்திரம் எனக்கு திருப்பிதரப்பட்டு அத்தோடு என்னை அனுப்பிய வருடத்திலிருந்து 2 வருடம் முடிய திரும்பவும் நோர்வே தேசத்திற்கு வரலாம் என **UDI** லிருந்து கடிதம் வந்திருப்பதாக! உண்மையிலே இரண்டாவது தடவையாக விசுவாசிக்க ஆரம்பித்தேன். அதே போன்று 2009 ஆம் ஆண்டு 1ம் திகதி எனக்கு கிடைத்த வாக்குத்தத்தம், ' உன் தேவனாகிய கர்த்தர் உன்னை நல்ல தேசத்தில் பிரவேசிக்கப்பண்ணகிறார்

(உபகாமம்8:9) இதைத் தொடந்து படிப்பீர்களானால் அவ்வார்த்தைகளெல்லாம் நோர்வே தேசத்திற்கே பொருந்தும். அவ்வருடம் அன்று முதல் அவ்வாக்குத் தத்தத்தை வைத்து ஜெபிக்கத் தொடங்கினேன். சரியாக ஜனவரி மாதம் 10 திகதி ஸ்பொன்ஷர் கடிதம் எனக்கு வந்தது! நோர்வே தூதரகத்திற்கு ஜனவரி 22 ஆம் திகதி கொண்டு சென்று கொடுத்தேன். கொடுக்கும் சமயத்தில் அவர்கள் கூறினார்கள். 9 மாதம் அல்லது 1 வருடம் எடுக்கலாம் பதில் தருவதற்கு!

ஆனால் 2009-09-22 ம் திகதி எனக்கு வீசா அனுமதிப்பத்திரம் என் கைக்குக் கிட்டியது. அதைத்திறந்து படித்தேன். அதில் எனக்கு நோர்வேயில் நிரந்திர வசிப்பிடமும் வேலை செய்வதற்கு அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது எனவும் வந்து வீசாவை எடுக்கும் படியும் அதில் எழுதியிருந்தது. அதைப் பார்த்தவுடன் நான் 4 வருடங்கள் அனுபவத்த வனாந்திர வாழ்க்கை, அவமானங்கள், நிந்தைகள், நெருக்கங்கள், கண்ணீர், கவலையெல்லாம் எனக்கு ஓர் தூசிக்குச் சமனாக தென்பட்டது. ஓ வென்று கத்தி என் அன்புத்தேவனுக்கு நன்றியைத் தெரிவித்தேன்.

ஆம் அன்பான சகோதரர்களே! எம்முடைய கர்த்தர் தன்னுடைய வார்த்தைகளை வைத்தே எம்மைத் தேற்றுகிறவராக இருக்கிறார். கொடுத்த வாக்கு மாறாதவர். அவர் வாக்கு மாற மனுபுத்திரனல்ல. தன்னுடைய பிள்ளைகளை 'விட்டு விலகுவதுமில்லை கைவிடுவதுமில்லை' ஒருபோதுமே கைவிட மாட்டார்.


ஆம் தேவ பிள்ளைகளே! எம்முடைய கர்த்தரை ருசித்துப்பாருங்கள். அவர் ரொம்ப ரொம்ப மிகவும் நல்லவர் இன்றும் அவருடைய அற்புதங்கள் அதிசயங்களைப்பற்றி தொடர்ந்து எழுதலாம். ஆனால் மற்றவர்களுடைய சாட்சிகளைப் பகிர்ந்து கொள்ளவேண்டும் என்பதற்காகாக இத்தோடு நிறைவு செய்து, என் அன்பான தேவன் எனக்கும் என் குடும்பத்திற்கும் செய்த அளவற்ற அதிசயத்திற்காக அற்புதத்திற்காக அவருக்கு கோடான கோடி நன்றியைத் தெரிவித்து அவருடைய நாமத்தை ஸ்தோத்தரிக்கிறேன். உயர்த்துகிறேன். அவருடைய நாமம் ஒன்றே மகிமைப்படுவதாக! 'கர்த்தருக்குள் எப்போதும் சந்தோஷமாய் இருங்கள்'

கர்த்தருக்கு அடுத்தபடியாக நான் மிக மிக நன்றி சொல்ல கடமைப்பட்டிருப்பது எமது தமிழ்திருமுழுக்குச்சபை போதகரும் எம்முடைய ஆவிக்குரிய தகப்பனுமாகிய Pastor: அன்ரன் சின்னத்தம்பி அவர்கட்கும் அவர் குடும்பத்திற்கும் மற்றும் உதவி ஊழியக்காரர்கள், விசுவாசக்குடும்பங்கள் அனைவருக்கும் தனித்தனியாக நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளேன். நான் இல்லாத வேளையிலே ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையில் எனது மனைவி பிள்ளைகளுக்கு எவ்வளவோ உதவிகள் செய்துள்ளனர். இதற்காக கர்த்தர் எனக்குத் தந்த நல்ல சபைக்காக, நல்ல ஆவிக்குரிய தகப்பனுக்காக நல்ல சகோதர குடும்பங்களுக்காக கர்த்தரை நான் ஸ்தோத்தரிக்கின்றேன்.

கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

கர்த்தருக்குள்
அன்புச் சகோதரன்.
ஜேம்ஸ் இருதயநாயகம்

## கப்பல்



**இயேசு கப்பலில் செல்லுங்கள் - அது**
**அசையாது ஆடாது**
**அமைதியாய் செல்லும் (வாழ்க்கையில்)**

**காற்று வீசினாலும் அசையாது**
**கடல் பொங்கினாலும் மூழ்காது**
**ஆசையுடன் போகலாம்**
**ஆனந்தமாய் செல்லலாம்**

**போக நீரும் வாரீரோ**
**போனால் பலனை காண்பீரே**
**போகாவிடில் போன கப்பலை - பார்த்து**
**நீரும் கண்ணீர் விட்டு நிற்பீரே**

**கப்பலை காண வாரீரோ**
**கவலை நீங்கி மகிழ்வீரே**
**காலம் இனியும் போதாதே**
**தாமதம் இன்றி வருவீரே**

சகோதரி.புஷ்பா

# உலகத்தின் கையில் நான்......



உலகத்தின் கையில் சொல்லமுடியாதவன்
கர்த்தருடைய கையில் சொல்லானவன்

உலகத்தின் கையில் நான் கரையும் பனி
கர்த்தருக்கோ நான் கண்ணின் மணி

உலகத்தின் கையில் நான் மதிப்பற்ற களி-மண்
கர்த்தருடைய கையில் விலைமதிப்பற்ற பாத்திரம்

உலகத்தின் கையில் விளங்காத பாத்திரம்
கர்த்தருடைய கையில் விளங்கப்பண்ணும் பாத்திரம்

உலகத்தின் கையில் மதிப்பற்றவன்
கர்த்தருடைய கையில் கிருபை பெற்றவன்

உலகம் உன்னை குற்றத்தால் மூடலாம்
கர்த்தர் உன் இருதயத்ததை பாறாரோ

உலகத்தில் சிலையை செதுக்காதே
செதுக்கிடு உன் கர்த்தரின் இராஜ்ஜியத்தை

உலகத்தில் என்னத்தை செதுக்குவாய்
செதுக்கிடு உன் கல்லான இருதயத்தை

உனக்கு தீமை செய்ய ஆயிரம் பேர்தான்
ஆனால் நன்மை செய்ய கர்த்தர் ஒருவர்தான்

உலகத்தின் கையில் இருக்காதே
ஓடி வா உன்னை உருவாக்கினவர் கையுக்குள்

உலகத்தில் உன்னை அணைப்பதற்க்கு யாரும் இல்லையோ
உள்ளத்தில் உன்னை அணைக்க கர்த்தர் இல்லையோ

உலகத்தில் யாரும் இல்லையோ உன்னை என்றும் அன்பு செய்ய
தேவன் இல்லையோ

உலகத்தில் நன்றி உள்ளவர்கள் யாரும்
இல்லையோ உனக்கென்று நன்மை செய்ய
தேவன் இல்லையோ.

உலகத்தின் களிமண் இல்லையடா நீ
கருணைபிரபுவின் கண்கள் தானடா நீ

உலகத்தில் மேடுகள் சந்தித்தாயே
கர்த்தர் உனக்காய் பாடுகள் சந்தித்தாரே

கர்த்தர் பட்டது ஆயிரம் பாடாகும்
அவருக்கென்று படுவதற்கு என்ன ஈடாகும்

உனக்கென்று செய்தவருக்கு என்னத்தை செய்வாய் என்னத்தை
செய்தால் இன்னும் உனக்கு செய்வார்

கர்த்தருக்காய் எழுந்திடு - தேவனுக்காய் வாழ்ந்திடு
உன்னை ஒப்பு கொடுத்திடு - கருணை பிரபுவின் கண்களாய்
இருந்திடு உலகம் கண்டிடு - பூமியை வென்றிடு
நீதியின் பாதையில் நடந்திடு - பயணம் தொடர்ந்திடு
பரலோகம் சென்றிடு - மகிழ்சியாய் தொழுதிடு

பாவமறியாத ஆட்டுகுட்டியாய் இருந்தார் ஆனால் உன்
பாவத்திற்காகப் பல பாடுகள் பட்டார்

உனக்காக சிலுவையை எடுத்தார் உன் பாவங்களுக்காக
தன்னையே கொடுத்தார்

ஆரோன் சகாயராஜ்





குதிரை யுத்தநாளுக்கு ஆயத்தமாக்கப்படும்; ஜெயமோ கர்த்தரால் வரும்.

# நான் கண்ட இயேசு எனக்கு நல்லவர்...

நான் சைவசமய ஆசாரங்களை அனுசரிக்கிற ஒருகுடும்பத்தில் பிறந்தேன். அம்மா கோவிலுக்குப் போனால் நானும் போவேனே தவிர விக்கிரகங்களுக்கு அணிவிக்கும் ஆடை ஆபரணங்களைப் பார்ப்பனே அன்றி வேறு எதிலும் ஈடுபாடு இருக்கவில்லை. எந்த விதமான கோட்பாடுகளுக்கும் என்னை ஈடுபடுத்திக் கொள்ளவும் இல்லை வாஞ்சையும் இருந்ததில்லை.

கிறிஸ்ரியன் பாடசாலையில் படித்தும் தேவனை அறிகிற அறிவு அங்கும் கிடைக்கவில்லை. எல்லாருடனும் பாடுவேன். தரும் செய்தியை எந்த விளக்கமும் இல்லாமல் கேட்பதே பழகிபோய் விட்டது. எனக்கு திருமண வயது வந்தது. எனது தாயாரின் இனத்தவரை மணம் முடித்து வைத்தார்கள். அவர் கிறிஸ்தவனாக இருந்தார். ஒருநாளும் என்னை ஆலயத்திற்கு அழைத்துப் போனதும் கிடையாது. தேவனைப் பற்றிய விளக்கங்களை சொல்லித் தந்ததும் கிடையாது. குழந்தைகள் பிறந்தார்கள். அவர்களும் தகப்பன் வழி யிலேயே போகும் படி வளர்க்கப்பட்டார்கள்.

எனது ஒரு மகள் தேவனை நன்கு அறிந்து கொண்டாள். இளைஞர்கள் கூட்டங்களுக்கும் போவதும் பைபிளை வாசிக்கவும் ஜெபிக்கவும் கற்றுக் கொண்டாள். என் மகளைத் தேடிவரும் சிநேகிதிகள் எனக்கு பைபிளை வாசிக்க கற்றுத் தந்தார்கள். எங்கள் வீட்டிற்கு வரும் பிள்ளைகள் ஜெபிக்கிற ஜெபம் என் மனதிற்கு ஆறதலைத் தரும். திடீரென்று என் கணவர் நோய்வாய்ப்பட்டார். டாக்டர் பார்த்துவிட்டு ஒரு கிழமை தான் உயிருடன் இருப்பாரென்று சொல்லிவிட்டார். நான் போகாத கோவில்களுக்கெல்லாம் ஓடினேன். ஒரு விக்கிரகமும் எனக்கு ஆறுதல் தரவில்லை. அவை கல்லாகவும் மரமாகவும் இருந்தது.

திரும்ப ஆண்டவரைத் தேடி ஓடினேன். இரண்டு வருடமாவது என் கணவர் உயிருடன் இருக்கும் படியாக அவருடைய சந்நிதியிலே விழுந்து கதறினேன். ஒரு கிழமையில் முடியுமென்று காலக் கெடு டாக்டர்களின் வார்த்தையைப் பிழையாக்கி இயேசு இரண்டு வருடம் வாழ வைத்தார். எனக்கு இருந்த பதட்டத்தில் நீடிய ஆயுளைக் கேட்காமல் இரண்டு வருடத்தைக் கேட்டேன். அது எனது பிழை! கேட்டதை கொடுப்பவர் என் தேவன். தன் பிள்ளைகள் என்றும் தவிக்காத படி ஓடோடி வந்து உதவி செய்பவர். இதன் பின் நானும் சிறிது சிறிதாக சத்தியத்தை அறிந்து கொண்டேன். எனது வீட்டுக்கு அருகாமையிலிருந்த வீட்டுக் கூட்டத்துக்கும் ஒரு ஆலயத்திற்கும் போய் வந்தேன். அங்கும் ஆண்டவரைப்பற்றி; அதாவது அவர் ஏன் இந்த உலகத்திற்கு வந்தார். என்றே எதுவும் போதிக்கப்படவில்லை. சைவ சமயத்திலிருந்து வந்த எனக்கு தேவனையும் அவர் வசனங்களையும் போதிக்காவிட்டால் எப்படி அவரை அறிய முடியும்? கணவர் இறந்தார். நானும் பிள்ளைகளுடன் சேர்ந்து கொண்டேன்.

இங்கு நான் போகும் ஆலயத்தில் தான் சத்தியத்தையும், ஆண்டவர் ஏன் இந்த பூவுலகத்திற்கு வந்தார் என்பதையும் அறிந்தேன். நாங்கள் செய்த பாவங்களுக்கு எங்களுக்கு கிடைக்கப்போகிற தண்டனையையும் அறிந்து கொண்டேன். பாவம் சின்னதாக இருந்தாலும் பெரிதாக இருந்தாலும் பாவம் பாவம் தான். பாவத்தின் சம்பளம் மரணம் என்பதை அறிந்தேன். நீதியின் தேவன் இயேசு என்று இப்போது நன்கு உணர்ந்து கொண்டுள்ளேன்.

கல்லும் மண்ணுமான விக்கிரகங்கள் தர முடியாத ஆறுதலையும் சந்தோஷத்தையும் இயேசு தந்து இருக்கிறார். என் குடும்பத்தில் உள்ளவர்கள் எல்லாரும் நான் ருசித்துப் பார்த்து மகிழ்ந்த இந்த இயேசுவை அறிய வேண்டுமென ஜெபிக்கிறேன். ஆத்துமாவிலே விடுதலையைத் தருபவர் இயேசு! நாங்கள் கேட்பதற்கும் மேலாக எங்கள் உள்ளத்தை ஆராய்ந்து சகலத்தையும் தருபவர்!

மனுஷன் முகத்தைப் பார்க்கிறான். ஆனால் இயேசுவோ உள்ளத்தைப் பார்க்கிறவர். அவர் அன்பு நிறைந்தவர். அவருடைய கிருபையால் இன்று நாம் எழுந்து நிற்கின்றோம். அவர் தூங்காமலும் உறங்காமலும் தனது உள்ளங்கையில் எமது நாமத்தை வரைந்து பாதுகாக்கிறவர். நான் அனுபவித்ததை, இதை வாசிக்கிறவர்களும் சுவைத்து மகிழ வேண்டுமென்று வாஞ்சிக்கின்றேன். நீங்களும் சுவைத்துப் பாருங்கள்.

இயேசுவின் நாமத்திற்கு ஸ்தோத்திரம்!

நன்றியுடன்

திருமதி: அந்தோனிப்பிள்ளை

# கிறிஸ்தவ வாழ்வில் பெற்றோரும் பிள்ளைகளும்!


இன்று உலகரீதியாக பிள்ளைகள் முக்கியத்துவம் பெறும் காலகட்டமாகும். பிள்ளைகளின் நலன் உரிமைகள் பேணப்படுவதில் சர்வதேச சமூக நிறுவங்கள் பெரும் அக்கறை எடுத்துவருகின்றன. உலக சிறுவர்தினம் பிரகடனப்படுத்தப்பட்டு வருவது இதற்கு சிறந்ததொரு சான்றாகும். உலகப்பிரகாரமாக அதிக அக்கறை பிள்ளைகள்பால் செலுத்தப்படும் போது கிறிஸ்தவர்களாகிய எமது குடும்பம், எப்படி செயற்பட வேண்டும் என்பதனை வேதாகமத்தின் அடிப்படையில் விளங்கிக்கொள்வது பொருத்தமுடையதொன்றாகும்.

வேதாகமமானது குடும்பவாழ்வு: பெற்றோரின் பொறுப்புக்கள்: பிள்ளை வளர்ப்பு பற்றி எத்தனையோ செய்திகளை நம்முன்னே வைத்துள்ளது. இறைவன் மனிதனைத் தனியாக அல்ல, மாறாக குடும்பமாக, சமூகமாக வாழவே படைத்தும் அழைத்தும் இருக்கின்றார். பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்திரம் என்று வேதம் கூறுகின்றது. வேதத்தில் பல சிறுவர் களின் பரிசுத்தமான வாழ்வு எடுத்துக்காட்டுகளாக அமைகின்றது.

ஈசாக்கு ஒரு பணிவுள்ள மகன்: அவரைத் தொடர்ந்து யோசேப்பு போன்ற ஆதிப்பிதாக்களின் வாழ்வானது எடுத்துக்காட்டாக அமைகின்றது. இந்த வரிசையில் ஒரு பெற்றோரின் பொறுப்பையும் ஒருமித்து விளக்கும் பாத்திரமாக சாமுவேலை எடுத்துக் காட்டாக குறிப்பிட முடியும். அது அவனது சிறந்த குணாதியங்களுக்கு காரணமாகவே இருந்துள்ளதை சாமுவேல் பகுதியில் பல்வேறு இடங்களை ஆதாரமாகக் கொண்டு விளக்க முடியும்.

தனக்கு ஒரு குழந்தையைத் தரும்படி அன்னாள் கண்ணீருடன் கர்த்தர் பாதத்தில் ஜெபித்தாள். அவள் வேண்டுதல் கேட்கப்பட்டது. தனக்கு கர்த்தர் கொடுத்த இந்த மகத்தான பரிசுக்காக பாலகனை, தனது பொருத்தனையை மீறாமல் கர்த்தர் பணிக்கே ஒப்புவித்தாள். அது மட்டுமன்றி, பிள்ளை பிறந்தபோது 'கர்த்தரிடத்தில் அவனைக் கேட்டேன்' என்னும் கருத்துப்பட 'சாமுவேல்' எனப்பெரிட்டாள்.

இக்காரியங்களில் பெற்றோரின் பொறுப்பு எத்தகையது என்பதனைத்தெளிவாக உணரவேண்டும். பிள்ளைகளுக்காக தேவனிடம் வேண்டுதல், பொருத்த னைகளை நிறைவேற்றல், அத்துடன் பிள்ளைகளுக்குப் பெயர் சூட்டுதல் ஆகியனவே இவைகளாகும். இன்று எத்தனை பெற்றோர் நவ நாகரீக மோகத்தில்




பிள்ளைகளுக்கு அர்த்தமற்ற பெயர்களைச் சூட்டி, அவர்களுக்கு அநாவசிய இடர்களை, சாபங்களைக் கூட மறைமுகமாக தேடிக்கொள்ள வகைசெய்கின் றார்கள். வேதாகமத்திலுள்ள அர்த்தமுள்ள, அழகா ன பெயர்களை நமது கிறிஸ்தவ பெற்றோர்கள் கண்டுகொள்ளாத நிலை கவலைக்குரியதே!

அன்னாளின் குடும்ப உறவும் சமூகத் தொடர்புகளும் கூட சிறந்த வழிகாட்டிகளாகவே அமைந்துள்ளது. 1சாமு: 21ம் அதிகாரம் இப்படிக் கூறுகின்றது: 'அன்னாளின் கணவன் எல்க்கானா வருடந்தோறும் கர்த்தருக்குப் பலி செலுத்த தன் வீட்டார் அனைவரோடும் போனான்' இக்கூற்று, எதை க்காட்டுகிறது? கர்த்தருடைய சந்தியில் குடும்பமாக சேரவேண்டியதன் அவசியம் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இன்று ஆராதனைகளுக்கு பெற்றோர் பல்வேறு சாக்குப்போக்குகளைக் கூறி பிள்ளைகளைத் தம்முடன் அழைத்துச் செல்வது குறைவடைந்து வருகின்றமை வருந்தத்தக்கது. சிறுவயதிலேயே ஆலயம், ஆராதனை பற்றிய வித்துக்கள் விதைக்கப்படாவிட்டால் வளரும் பருவத்தில் தேவபக்தி, அன்பு என்பன உருவாகா து. அதுவும், கவனக்குறைகள் மலிந்துவிட்ட தற்கால வாழ்க்கையில் இளந்தலைமுறையினர் தேவபக்தி அற்றவர்களாக வளருவதற்கு, பெற்றாரின் இத்தகைய அலட்சியங்கள் வழியமைத்துவிடும் என்பதில் சந்தேகமே இல்லை.

குடும்ப ஐக்கியம் மற்றும் ஆராதனைகள்தான். குடும்பத்துக்கு ஆசீர்வாதமாக அமைகின்றது........

மலடி என்ற நிலைக்கு ஒதுக்கப்பட்டு கண்ணீர் விட்டு ஜெபித்த அன்னாளுக்கு கர்த்தர் அருளிய கிருபை சாமுவேல் மட்டுமல்ல, மேலும் 3 குமாரர்களையும், 2 குமாத்திகளையும் பெற கர்த்தர் அவளை ஆசீர்வதித்தார் என்பதை நாம் நன்கு அறிவோம். அன்னாளின் ஜெபமும் வழிநடத்தலும் சாமுவேலை கர்த்தருக்குப் பிரியமான பிள்ளையாய் ஆலயத்தில் வளர வைத்தது.

சாமுவேல் கர்த்தரால் வழிநடத்தப்பட்டது மட்டுமன்றி பல்வேறு வகைகளில் ஆசீர்வதிக்கப்பட்டதை பின் வரும் வசனத் தொகுப்புகளிலிருந்து நோக்கமுடியும்.

1.கர்த்தரைப் பணிந்து கொண்டான். (1சாமு 1:28) அன்னாள் அவனை ஏலியிடம் ஒப்படைத்த போது சாமுவேல் முதலில் செய்த காரியம் இதுதான்!

2.கர்த்தருக்கு பிரியமாக சாமுவேல் வளர்ந்ததால் 'கர்த்தர் அவனைக் கூப்பிட்டார்' (1 சாமு 3:4) அவன் கர்த்தருடைய சத்தத்திற்கு செவிகொடுத்தான்.

3. சாமுவேல் வளர்ந்தான். கர்த்தர் அவனுடனே கூட இருந்தார். (1 சாமு 2:19)

4. இதனால் சாமுவேல் கர்த்தரின் தீர்க்கதரிசியானான் என இஸ்ரவேலருக்கு கர்த்தர் விளங்கப்பண்ணினார். (1 சாமு 2:20)

5. தம்முடைய வார்த்தையால் சாமுவேலுக்கு தம்மை வெளிப்படுத்தினார். (1 சாமு 2:21)

6.இஸ்ரவேலருக்காக (அவன்மூலம்) நியாயம் விசாரித்தார். (1 சாமு 7:15)

7. (அவன்) கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணினான். (1 சாமு 12:18)

இத்தகைய உயர்ந்த ஆசீர்வாதங்களை கர்த்தரிடத்திலிருந்து சாமுவேல் பெற்றுக்கொண்டதற்கு அடிப்படைக்காரணம் அவனது பெற்றோரின் பக்திநிறைந்த வாழ்க்கையாகும். எனவே பிள்ளைகள் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட, பெற்றோரும் இவ்வாறான முக்கிய விடயங்களில் கவனம் எடுக்க வேண்டும். அவையாவன:

1.பெற்றோர் ஜெபவழிபாடுகள், ஆராதனைகளுக்குப் பங்குபற்ற சிறுவயது முதலே பிள்ளைகளுக்கு வழிகாட்டவேண்டும்.

2.அன்னாளைப்போல பாரத்துடன் பிள்ளைகளுக்காக வேண்டுதல் செய்யவேண்டும். அனுதினமும் அவர் கரங்களில் பிள்ளைகளை ஒப்புக்கொடுக்கவேண்டும்.

3.பெற்றோருக்காக ஜெபிக்க பிள்ளைகளுக்கு பழக்க வேண்டும்.

எனவே ஒவ்வொரு குடும்பமும் தேவ ஆசீர் பெற்ற வீடுகளாக மாற, அன்னாளும் சாமுவேலும் ஒரு சிறந்த எடுத்துக்காட்டெனக் கொண்டு எமது வாழ்வையும் சீர்படுத்திக் கொள்ளவேண்டியது முக்கியம் கடமை என்பதை மறக்காமல் நினைவில் இருத்திக் கொள்ளுங்கள்.

இலங்கையிலிருந்து,
சகோதரி. றீட்டாராணி ஸ்டனிஸ்லோஸ்

# நல்ல மணிகளே களஞ்சியத்தில் சேர்க்கப்படும்

நல்ல மணி களஞ்சியம் என்றதும் நீங்கள் நினைக்கிறீர்களா அறுவடை என்று? கெட்டிக்காரப் பிள்ளைகள்... அறுவடை என்று இமைப்பொழுதில் சொல்லிவிட்டோம். ஆனால் நடைமுறைப்படுத்துவதற்கு எவ்வளவு ஆயத்தம் செய்ய வேண்டியுள்ளது. அப்பப்பா! போதும் போதும் என்று ஆகிவிடுகிறது என்று விவசாயிகள் சலித்துக் கொள்வதைப் பார்க்கிறோம் கேட்கிறோம். ஆனால் அறுவடை என்றால் விளைந்த விளைச்சலை அறுத்து எடுப்பதில் விவசாயிகள் மத்தியில் கொண்டாட்டம் தான். அதிலும் விளைச்சல் அதிகம் என்றால் சொல்ல வேண்டியதில்லை. ஒரு விவசாயி பயிரிடும்போது எவ்வளவு கவனமாய் காரியங்களை செய்கிறான். நல்ல நிலம் தெரிந்து எடுத்து, பண்ணபடுத்தி, நல்ல விதைகளை போட்டு, நிறைவான தண்ணீரும் தேவையான அளவு பசளையும் இட்டு வளர்க்கிறான். அந்த பயிர்கள் வளர்ந்து நிறைவான விளைச்சலை கொடுத்தால், அவனுடைய சந்தோஷத்தை சொல்ல வேண்டியதில்லை. அந்த விளைச்சலை வெட்டி எடுத்து நல்ல மணியையும் (விதையை) பதரையும் பிரித்து விவசாயியானவன் தனது களஞ்சியத்தில் நல்லவற்றை சேர்க்கிறான். பதரை அப்படியே விடாமல் அக்கினியில் போட்டு எரிகிறான். இதை உலகத்திலுள்ள விவசாயி செய்து முடிக்கிறான்

நாம் ஆண்டவரை அறிந்து கொண்ட தேவ பிள்ளைகள் கூட அறுவடையை குறித்து பேசுகிறோமே! என்ன அந்த அறுவடை? விவசாயி மண்ணில் விளைந்த பயிரை மண்ணை விட்டு பிரித்து எடுப்பது போல தேவனும் உலகத்திலிருக்கும் (ஜனங்களை) ஆத்துமாக்களை

உலகத்திலிருந்து பிரித்து தேவஜனமாக மாற்றுகிறார்.

தேவன் எங்களுக்கு நல்ல நிலத்தை குறித்து லூக்கா 8:5-15ல் சொல்லுகிறார். நல்ல நிலத்தில் விழுந்தது, அது முளைத்து, ஒன்று நூறாகப் பலன் கொடுத்தது. நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள் வசனத்தைக் கேட்டு, அதை உண்மையும் நன்மையுமக இருதயத்திலே காத்துப் பொறுமையுடனே பலன் கொடுக்கிறவர்களாக இருக்கிறார்கள். இப்படி நல்ல விளைச்சலைப் பெற்றுக்கொள்ள வேத வசனமாகிய வார்த்தையில் நிலைத்து, இயேசுகிறிஸ்து என்கின்ற விதையில் முளைக்க பரிசுத்தாவியாகிய அனல் வேண்டும். அப்படியாக வளர்ந்தால் நாம் நல்ல பலனைக் கொடுக்கிறோம். நல்ல பலனை கொடுக்க வேண்டுமாகில், எப்படியாக நாங்கள் இருக்கவேண்டும் என்று வேதம் சொல்கிறது. யோசுவா 1:8 'இந்த நியாயப் பிரமாண புஸ்தகம் உன் வாயை விட்டுப் பிரியாதிருப்பதாக; இதில் எழுதியிருக்கிறவைகளின்படியெல்லாம் நீ செய்யக் கவனமாயிருக்கும்படி, இரவும் பகலும் அதைத் தியானித்துக் கொண்டிருப்பாயாக; அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப்பண்ணுவாய், அப்பொழுது புத்திமானாயும் நடந்துகொள்ளுவாய்' இதன்படி வாழ்கின்ற மனிதன் நல்ல பலனை கொடுக்கிறான்.

நாம் தேவனுடைய வார்தையினால் பண்படுத்தப்படுகிறோம். தேவ வசனம் எங்களை உடைத்து உருமாற்றுகிறது. எங்கள் உள்ளத்திலுள்ள களைகளாகிய பொல்லாத சிந்தையை எடுத்துப் போடுவது மாத்திரம் அல்ல, அதிலிருந்து மனம்திரும்ப செய்கிறது.தேவன் மீது விசுவாசமுள்ளவர்களாக்கிறது. எபிரேயர் 11:6 இல் 'விசுவாசம் இல்லாமல் தேவனுக்கு பிரியமாயிருப்பது கூடாத காரியம், ஏனென்றால் தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்'. நாம் விசுவாசிக்க தொடங்கும் போது நல்லவிதையாகிய வசனம் எம் நல்ல நிலமாகிய உள்ளத்திலே அழிவ டையாமல் வளர்ந்து கொண்டு வருகிறது.

அவர் தமது வசனத்தை அனுப்பி எங்களைக் குணமாக்கி, எங்களை அழிவுக்குத் தப்புவிக்கிறார். (சங்கீதம் 107:20) அவருடைய வார்த்தை வரும் பொழுது நாம் அப்படியே ஏற்றுக் கொண்டு உட்கொள்ளுவோமானால் நாம் அழிவில்லாமல் வளரும் போது பரிசுத்தாவியானவர் எங்கள் மேல் ஊற்றப்படுகிறார். பரிசுத்தாவியானவர் வரும் போது பாவத்தையெல்லாம் சுட்டிக்காட்டி எங்களை இன்னும் நல்ல முத்துக்களாக விளங்க உதவி செய்கிறார். இப்படியாக ஆண்டவருக்குள் வளர்ந்து முதிர்ச்சியை அடையும் பொழுது பிரித்தெடுக்கப்படுகிறோம். அந்த நிலை தான் நம் நியாத்தீர்ப்பு நாள் நிலை.

விவசாயி நல்ல மணிகளை களஞ்சியத்தில் சேர்ப்பது போல நம்முடைய தேவனும் நியாயத்தீர்ப்பு நாளில் செய்கிறார். 'அவனுடைய கிரியைகளின் படி அவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோட கூட வருகிறது'. என தேவவார்த்தை சொல்லுகிறது. 'நல்ல விதை தேவராட்சியத்தின் புத்திரர்'. புத்திரராகிய நாம் தேவனாகிய அப்பாவுடன் கூட பரலோகத்தில் நித்திய காலமாக தேவனுடன் வாழ்வோம். பரலோகத்தில் நம்மை ஆண்டவர் தன்னைப் போல தன்னுடைய மகிமைக்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார். பிலிப்பியர் 3:20,21ல் நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது. தேவன் எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்திக் கொள்ளத்தக்க தம்முடைய வல்லமையான செயலின்படியே, நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமை சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார்.

அது மாத்திரமல்ல வெளி 22:1-5 கூறுகிறது நாம் முழுமையடைகிறோம் அல்லது உன்னத நிலையை அடைகிறோம். பதரையோ அக்கினியில் சுட்டெரிப்பார். மனிதராகிய நாம் சிலசமயங்களில் பதர் போல ஒன்றுக்கும் பிர-யோசனம் இல்லாமல் போகிறோம். யோவான் 8:51ல் 'ஒருவன் என் வார்த்தையைக் கைக்கொண்டால், அவன் என்றைக்கும் மரணத்தைக் காண்பதில்லை என்று பார்க்கிறோம்'. கைக்கொள்ளாத மனிதன் மரணத்தை சந்திக்கிறான் என்றும் அதன் அர்த்தம் வெளிப்படுத்தல் 21:8ல் எப்படிப்பட்ட பதர் மனிதனுக்குள் இருக்கிறது என்பதையும் வாசித்து அறிந்து கொள்ளுங்கள்.

சகோதரி: ராணி நேசன்



# உலகப் பொருளாதாரச்சரிவும்

# பூகோளம் வெப்பமடைதலும்!



இன்று மானிடம் இருபெரிய நெருக்கடியில் தத்தளித்துக் கொண்டிருக்கின்றது. உலகின் எந்தப்பக்கம் நோக்கினும் சரிந்து கொண்டிருக்கும் உலகப்பொருளாதாரமும். எரியத்தொடங்கியிருக்கும் பூகோளச் சூழலும் பொருளாதார நிபுணர்களையும், சுற்றாடல் பாதுகாவலர்களையும் திணறடித்து, தீர்வுகாண முடியாத பெரும்பிரச்சினையாக உருவா-கிக் கொண்டிருக்கின்றது. கடந்த காலங்களில் காணப்படாதளவு காலநிலை மாற்றங்களும், கைநழுவிப்போய்க் கொண்டிருக்கும் பொருளா-தர ஸ்திரத்தன்மையும் இன்று உலகைத் திகைக்க வைத்துக்கொண்டிருக்கின்றது. தீர்வுகளை எதிர்பு கூற முடியாதபடி மனிதன் திகைத்து நிற்கும் இக்கால கட்டத்தில் வேதத்தின் வழியாக இந்நிலைமைகளை எடுத்து நோக்குவது சாலச்சிறப்பாகும்.

கடைசிக்காலங்கள் எனக்கூறப்படும் யுகத்தின் இறுதிக்கட்டத்தை நோக்கி உலகம் சென்று கொண்டிருக்கும் இந்நாட்களில் நாமும் வாழ்கின்றோம். இந்த மாறுபட்ட எதிர்பாராத சூழ்நிலைகள் குறித்து நாம் கலங்கவேண்டியதோ: ஆச்சரியப்பட வேண்டியதோ இல்லை என்றே கூறவேண்டும்.

நம் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவே தமது வருகைக்கான காலகட்டத்தின் அறிகுறிகளைத் தெட்டத் தெளிவாக நமக்கு கூறியிருப்பதை வேதம் எடுத்துக் காட்டுகின்றது. உலகத்தோற்றம் முதல் இறுதிநாள் வரைக்கும் இடம்பெறப்போகும் அத்தனை காரியங்கள் பற்றியும் வேதம் வெளிப்படையாகவோ, மறைபொருளாகவோ, உவமைகள், மற்றும் தீர்க்கதரிசனங்கள் மூலமாகவே கூறியிருப்பதை நாம் அறிவோம். படைப்பின் மகத்துவம் ஆதியாகமத்தில் ஆரம்பமாகி வெளிப்படுத்தல் ஆகமத்தில் முற்றுப் பெறுகின்றது. இன்றைய காலகட்ட நிகழ்வுகளை, ஆவியானவரின் வழிகாட்டுதலுடன் வேதம் கூறுவதை விளங்கிக்கொண்டால், இன்றைய இடர்பாடுகளின் வெளிப்பாடு என்ன என்பதனை நாம் புரிந்து கொள்ள முடியும்!

படைப்பின் மகத்துவம் ஆதியாகமத்தின் 02ம் அதிகாரத்தில் சிறப்பாக எடுத்துரைக்கப்படுகின்றது, கர்த்தர் கரத்தின் மேன்மையான படைப்புகள் யாவும் மனிதன் செய்த பாவத்தின் விளைவினா ல் சபிக்கப்பட்டன. பூமியை தேவன் சபித்தபோது, அதன் இயல்பான, இனிமையான இயற்கைச்சுபாவம் தலை கீழாக மாறிற்று. 'பூமியையும் அதன் சகலத்தையும் ஆண்டுகொள்ளுங்கள்' (ஆதி 1:28) என ஆண்டவர் கொடுத்த வாக்கினை மனித ன் மீறிய போதே பூமியின் சுபாவ இயல்புகளும், இயற்கை அனைத்தும் தாக்கத்துக்கு உட்பட்டது. ஒழுங்கான இயல்புயாவும் ஒழுங்கற்ற, எதிரிடை-யான தன்மையைப் பெற்றுக் கொண்டன. மனிதன் மட்டும் தண்டிக்கப்படவில்லை, மாறாக அவனோடு கூட பூமியும் சபிக்கப்பட்டது. (ஆதி 3: 17-18) இன் படி 'பூமி உன்னிமித்தம் சபிக்கப்பட்டிருக்கும்' என்றும் (ஆதி 3:18)ல் அது முள்ளையும் குருக்கையும் முளைப்பிக்கும்' எனவும் குறிப்பிட்டப்பட்டுள்ளது.

இது எதனைக் காட்டுகிறதென்றால், சூழலில் ஏற்பட்ட மாற்றம் ஏற்படப் போகின்ற மாற்றங்களுக்கு அடிப்படையாக விட்டதல்லவா! பூமியைச் சபித்தாலும் அதனை பாதுகாக்கவும் , மனித இனம் உயிர்வாழவும் கூடியதான தன்மையை தேவன் உருவாகியிருந்தார். சூரிய கிரகணங்களின் புறவூதாக் கதிர்கள் பூமண்டலத்தை எரித்து விடாத வண்ணம் கவசம் போன்ற ஓசோன் - வாயுப்படையை பாதுகாப்புக் கவசமாகத் தந்த இறைவனின் அன்பை என்னென்று சொல்வது!! தீமையில் உழன்றுவிட்ட மனிதனுக்கு அதன் அருமை பெருமை கூட தெரியாமல் போய்விட்டது. அந்தோ! தொழில்நுட்ப வளர்ச்சியும், போட்டியும் பொறாமையும் இயற்கையை மேலும் நாசப்படுத்தி, சுயநலமான செற்பாடுகளைத்தான் தூண்டி வளர்த்தது. அதன் விளைவுகளை இன்று நாம் அநுபவிக்கத் தொடங்கி விட்டோம், ஓசோன் படலமானது, பூமியில் மனிதனால் உருவாக்கப்படும் செயற்கையான இரசாயன வாயுக்கழிவுகளால் பலவீனமாகிவிட்ட நிலை உருவாகியுள்ளது.

சனப்பெருக்கமும், பொருளாதாரப் போட்டிகளும், அளவுக்கு மீறிய எரிபொருள் பாவனையும் சுவாசிக்க உதவாத காபன் வாயுக்களையே உற்பத்தியாக்கி பூமிக்குள்ளேயே உறிஞ்சப்பட்டு தேக்கும் நிலை உருவாகி உள்ளது. படைப்பை ஆண்டு நடத்த ஆசிபெற்ற மனிதன் படைப்பை சிதைக்கும் செயற்பாட்டில் ஈடுபடுவதானது தேவசித்தத்தை மீறுவதாகவே அமைகின்றது (ஆதி 8:22)ல் கர்த்தர் பூமியை 'பூமியுள்ள நாளளவும் விதைப்பும் அறுப்பும், சீதளமும் உஷ்ணமும், கோடைகாலமும் மாரிகாலமும், பகலும் இரவும் ஒழிவதில்லை' என மனதார ஆசீர்வதித்ததை மனிதன் இன்று மறந்துவிட்டான். வெப்பத்தின் விளைவு, காலநிலை மாற்றங்கள், இயற்கை அனர்த்தங்கள், தொற்று நோய்கள் என்று அழிவுப்பட்டியலை நீளச்செய்து கொண்டே போய்விட்டான். பூகோளச் செயற்பாடுகள் குழம்பும் நேர- காலத்தை கர்த்தர் அறிந்தே இருக்கிறார்.

மனிதனின் ஆவியைப் பகுத்தறியும் பரமன் அவர். எனவேதான், தமது இரண்டாம் வருகையின் அடையாள முன்னெச்சரிக்கையாக இந்த நிகழ்வுகள் யாவையும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே கர்த்தராகிய இயேசுதாமே துல்லியமாக எடுத்துக்கூறிவிட்டார். மத்தேயு 24, லூக்கா 21 ஆகிய அதிகாரங்கள் இவற்றை நமக்கு நேரிடையாகவே எடுத்துக் கூறும் சாட்சிகளாக இன்றும் பேசுகின்றன. லூக்கா 21:1 மற்றும் மத்தேயு 24:7 ஆகிய வசனங்கள் இன்றைய இயற்கை அனர்த்தங்கள்பற்றி தெளிவாகக் கூறுகின்றன. இவற்றுக்கு அடிப்படைக்காரணம் புவியின் இயற்கைத்தன்மை மாற்றமடைந்து பூமி வெப்பமடைவதே என்று இன்று விஞ்ஞானம் விளக்கிக்கொண்டிருக்கிறது. இவை தற்செயலாக நிகழ்ந்து கொண்டிருக்கும் காரியங்கள் அல்ல. தேவன் சகலத்தையும் அறிந்த சர்வலோகாதிபதி! ஏற்கனவே நிகழ்வுகளின் விளைவுகள் கூறி, அவை அவரது வருகையின் அடையாளங்கள்தாம் என்றும் கூறிவிட்டார்.

எதிர்பாராத இயற்கை அனர்த்தங்கள், எம்மை இன்றுஎச்சரித்துஆயத்தமாக்கும்சுவர்களாம்என்பதை மனிதில் இருத்திவைத்தல் மிக அவசியமாகின்றது. பூமியைப்பாதுகாக்க மனித விஞ்ஞானிகள் மண்டையைக்குழப்பினாலும்,தீர்வுகள்காணமுடியாமல் தத்தளிப்பது இப்போது புரிகிறதல்லவா நமக்கு!! பூமி வெப்பமாகி இயற்கை சமநிலை குழம்பி இறுதி நாட்களை நோக்கிச் சென்று கொண்டிருப்பதனை யாராலும் தடுத்து நிறுத்த முடியாதது தேவசித்தமே! பூகோள வெப்பத்தினால் மானிடம் திணறுண்டு இக்காலத்தில் உலகின் வல்லரசுகளாய் கொடிகட்டிப் பறந்த நாடுகளில் எதிர்பாராவிதமாக ஏற்பட்ட அழிவு பொருளாதார வீழ்ச்சியாகும். தேவனை மறந்து, உலகை தமது கைகளில் வைத்து ஆட்டிப் படைக்கலாம் என வாழ்ந்து கொண்டிருந்த உலகம் தலைகீழாக மாறும் நிலையை பொருளாதாரச் சரிவு ஏற்படுத்திவிட்டது. யுத்த ஆயுதங்களின் விளைவுதான் இத்திடீர் சரிவுக்கு அடிப்படைக் காரணம். இது மனித சமுதாயத்தின் அடிப்படை வாழ்வையே நிலைகுலையச்செய்துவிட்டது, தவிர, வல்லரசுகள் வலுவிழந்து புதிய அரசியல், சமூக, பொருளாதார அமைப்புகள் உருவாக வழியமைத்ததுள்ளது.

இதுவும் எதிர்பாரமல் ஏற்பட்ட நிலையல்ல என்பதை வேதத்தை தெளிவாக உற்று நோக்குமிடத்து அறியலாம். இன்று கடைசிக் காலகட்ட தீர்க்கதரிசனங்கள் நிறைவேறும் காலகட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

வேதத்தின் இறுதிநூலான வெளிப்படுத்தல் ஆகமத்தை நோக்கினால், பூமியில் இயற்கை மாற்றங்களும், பொருளாதார மாற்றமும் ஏற்படும் என்பதை ஏற்கனவே தேவன் வெளிப்படுத்தியுள்ளதை அறியமுடியும். 'மிருகம்' என்று குறிப்பிடப்படும் பொருளாதார ஆதிக்கம் வல்லரசுகள் வலுவிழக்கும் காலகட்டமாகும். 'பத்துத்தலைகள்' எனக் குறிப்பிடப்படும் ஐரோப்பிய நாடுகளின் ஒன்றியம் இப்போதுபுதிதாகவலுப்பெற்றுவருகின்றது.பொருளாதார மையைத்தை தமது கூட்டு அதிகாரத்தில் அடைத்து உலகைத் தம் கைக்குள் கொண்டுவரும் நடவடிக்கைகள் மறைமுகமாக நடந்து கொண்டிருக்கின்றன. (வெளிப்பாடு13:1)ன் வசனம் இக்கூற்றுகளை உணர்த்தக்கூடியதாக அமைந்துள்ளது. இன்று பூகோளமயமாதல் (**GLOBALISATION**) என்ற மாயை இன்னொரு அச்சுறுத்தலாயும் காணப்படுகின்றது. இதுவும் ஒருவகையான அடிமைத்தனத்தை உருவாக்கும் செயற்பாடாகும். இவ்வாறு இன்று உலகை உலுக்கிக்கொண்டிருக்கும் பூளோக வெப்பமும் பொருளாதார சரிவும் கடைசிக்கால அடையாளங்களை நிறைவேற்றிக்கொண்டிருக்கின்றன. அறிவு பெருத்து அன்பு வற்றிப் போகும் இந்நாட்களில் வாழும் நாம் இந்த அடையாளங்களை ஒரு முன்னெச்சரிக்கையாக் கொண்டு தேவனுடைய வருகைக்கு எம்மை ஆயத்தப்படுத்த தயாராகுவோம்!!!

சகோதரன்: றெஜினோல்ட் பிரசாத்
ஸ்டனிஸ்லோஸ்



# காலங்களைக் கர்த்தரோடு கடக்கும் எமது வாலிபர் ஐக்கியம்

”வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம் பண்ணுவான் உமது வசனத்தின் படி தன்னைக் காத்துக் கொள்ளுகிறதினால் தானே” (சங் 119:9)

ஆம்! இதே வசனக் கருப்பொருளை தமது அடிப் படையாக்கொண்டு 2003ம் ஆண்டில் அதன் ஆரம்ப நாட்களைத் தொடக்கிய தமிழ் திருமுழுக்குச் சபை வாலிபர் ஐக்கியம் GENERATION 'CHRIST' இவ்வருடம் 2010 ஜனவரி 25 ம் திகதியுடன் அதன் ஏழாவது வருடத்தினைப் பூர்த்தி செய்கிறது. ஏழு எனும் எண் வேதாகமத்தில் 'பூரணத்துவம்' எனும் விடயத்தை அடிக்கடி எடுத்தியம்புகிறது. அதே போல் இவ்வாலிபர் குழுவின் வளர்ச்சி வரலாறு பற்றி இம்முறை எழுத ஆரம்பிப்பது எமது விடுதலை சஞ்சிகைக்கு மகுடம் வைத்தாற் போல் அமையும் என்பதில் சந்தேகமில்லை.

பல மிகுந்த பிரயாசங்களின் பின்னராக இவ்வாலிபர் குழுவின் உருவாக்கம் நால்வருடனேயே ஆரம்பித்தது. இவர்கள் - ரஞ்சன், றொனால்ட், அன்ரீயா, மற்றும் கொன்சில்டா ஆகியோர் ஆவர்.

இவ்வொன்றுகூடல் ஆரம்பித்த ஆரம்பத்தில் வெறுமனே கலந்தரையாடலும், விளையாட்டுக் களுமாகவே இருந்தது. ஆனால் ஓரிரு மாதங்கள் கழித்து இக்குழு புதியதொரு பரிமாணம் கண்டது. அதாவது எமது அருமைப் போத-கர் லக்கி (அன்ரன் சின்னத்தம்பி) எம்முடன் நேரம் செலவழித்து, எம்முடன் ஒருவராக இருந்து எம்முடன் மனம்விட்டுபேசி, ஒரு-வரை ஒருவர் புரிந்துகொள்ளுதலை கற்பித்துத்தந்தார். மேலும், எமது சபையின் தரிசனம் குறித்து சிந்திக்கவும் வைத்தார். அன்றைய நாள் முதல் கர்த்தர் எம்மை எமது தரிசனத்தில் செம்மையாக வழிநடத்திச் சென்றார்.

மேலும் சில நாட்களின் பின் சகோதரன் றிக்மனையும் தேவன் எம்முடன் இணைத்தது எமக்கு இன்னும் உற்சாகம் தந்தது. எமது வாலிபர் ஐக்கிய ஊழியங்களின் ஆரம்பக்கட்டமாக; நாம் தேவனுடைய நற்செய்திகள் அடக்கிய துண்டுப்பிசுரங்களை விநியோகிக்கத் தொடங்கினோம். இதன் மூலம் தெருக்களில் அநேகமான தமிழ் மக்களை சந்தித்து கர்த்தருடைய மகிமையை எடுத்துரைத்தோம். அது எமக்கு வித்தியாசமானதொரு அநுபவத்தை கொடுத்தது.

2003 ன் நடுப்பகுதியில், எமது முதலாவது வாலிபர் ஞாயிற்றுக்கிழமை (**Youth Sunday**) துதி வழிநடத்தலுடன் ஆரம்பித்தது வைத்து முக்கியமானதொரு தருண-மாகும். கர்த்தருக்கே ஸ்தோத்திரம்!

அதற்கடுத்த மாதம-ளவிலேயே **oppdal** ல் இடம்பெற்ற நோர்வேஜிய திருமுழுக்கு சபையின் வருடாந்த மாநாட்டில் எமது வாலிபர் குழு ஒரு பாடலைப் பாடும் படிக்கு அழைக்கப்பட்டிருந்தது. கிட்டத்தட்ட 1000 பேருக்கு மேல் அதைப் பார்த்து மகிழ்ந்தது எமக்கு மேலதிக ஊக்கத்துடன் மென்மேலும் வேறு பல காரியங்கள் செய்யவும் எம்மை உந்திற்று.

அவ்வருடத்தில் தொடர்ந்து வந்த எமது சபையின் கோடை-கால முகாமில் எம்மில் இரு வாலிபர்கள் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார்கள்.

பின்னரான நாட்களில் எமது ஆவிக்குரிய ஜீவியத்தில் மாற்றங்களை உணர ஆரம்பித்தோம். இதன் ஆரம்பக்கட்டமாக எமது வாலிபர் ஐக்கியங்களில் வேத வசனங்களைத் தியானிக்கத் தொடங்கினோம். மேலும் எமது சிற்சில ஐக்கிய ஒன்று கூடல் களை எமது சபை விசுவாசக் குடும்பங்களை அவர்களது வீடுக-ளில் சந்தித்து அவர்களுடனேயே கழித்தோம்.

சில நாட்களின் பின்னராக எமது ஆலயத்தில் சிறியதொரு சிற்றுண்டிச்சாலையை ஆரம்பித்து அதன் மூலம் பெற்ற வருவாயை, நாம் எமது இலங்கை மிஷன் ஊழியங்களுக்காக பணிபுரிந்து கொண்டு மிகவும் கஷ்டமான வாழ்க்கைக்குள்ளாயிருந்த மூன்று வாலிபர்களுக்கு சம்பளமாக மாதந்தோறும் அனுப்பத் தொடங்கினோம். (தலா 2000 இலங்கை ரூபா 6000)

இவ்வூதியத்தை நாம் கொடுப்பதற்கு எமது சபையாரே எமக்கு உதவி புரிந்தது எமக்கு புத்தூக்கம் தந்தது. YOU HELPED US TO HELP FURTHER என்ற கூற்றுக்கிணங்க சபையார் எமக்கு இந்த விடயத்தில் தமது பேருதவியை நல்கினர்.

2003ன் மார்கழி மாதத்தில் (GENERATION C) யின் முதலாவது கிறிஸ்மஸ் விழா நடைபெற்றமை எமது வரலாற்றின் ஒரு மைல்கல்லாகும்.
மிக முக்கியமாக எந்தொரு

கிறிஸ்தவ பின்னணியும் இல்லாத எமது வாலிபர் குழுவுக்கு 2003ம் ஆண்டானது பல காரியங்களைக் கற்றுக்கொள்ள உதவிற்று. மற்றும் பலவற்றை செய்ய உந்திற்று என்றே சொல்லலாம். தேவகிருபை ஒன்றே இவற்றுக்கெல்லாம் உதவிற்று என்பதுடன் கர்த்தர் எம்மை வழிநடத்தக் கொடுத்த எம் அருமைப்போதகர் லக்கிக்கும் அவரது குடும்பத்தாருக்கும் நாம் அதிக நன்றிக்கடன் பட்டிருக்கின்றோம். ஆரம்பத்தில் ஒரு போதகராக அவரைப் பார்த்தோம். பின்னர், நல்லதொரு ஆலோசனைத் தகப்பனாகக் கண்டோம். இறுதியில் எம்முடன் ஒருவராகவும், ஒரு சிறந்த நண்பராகவும் கண்டுகொண்டோம்.



இவ்வாறே எமது ஆரம்ப நாட்களின் வரலாற்றை உங்களோடு பகிர தேவன் தந்த கிருபைக்காக நன்றி கூறும் அதே வேளை, அடுத்தடுத்த "விடுதலை' சஞ்சிகைகளில் எமது பின்னரான வளர்ச்சியின் வரலாறு தொடர்ந்து எழுதப்படும் எனக்கூறி கர்த்தருடைய பரிசுத்த நாமத்தில் வாழ்த்தி முடிக்கிறோம்.

கர்த்தர் உங்களை என்றென்றும் ஆசீர்வதித்து நடத்துவாரக!



*சகோதரி: கொண்சில்டா றெஜினோல்ட் பிரசாத்*








Listen to our 24 hours online Gospel Radio

Viduthalai Fm


Reaching the Nations with Good news...

Live Programes : Mon 17:00 - 20:00
Wed 17:00 - 20:00
Fri 21:30 - 00.30

For your Prayer/ songs request call us : +47 21 44 75 84, during the live programes.

Chat with us Live : viduthalaifm@gmail.com
viduthalaifm@yahoo.com
v1fm@hotmail.com

www.v1fm.com



குதிரை யுத்தநாளுக்கு ஆயத்தமாக்கப்படும்; ஜெயமோ கர்த்தரால் வரும்.

# தமிழ் வேதாகமத்தின் வரலாறு



தமிழர் தென் இந்தியாவிலும் தென் கிழக்கு இந்தியாவிலும் வட இந்தியாவிலும்,வடக்கு கிழக்கு இலங்கையிலும் அதிகமாக வாழ்கின்றனர். தென் இந்தியாவிலுள்ள் தமிழரே மற்றய நாடுகளுக்குச் செல்லும் விருப்பும், அந்நாடுகளில் குடியேறி அங்குள்ள சுவாத்திய நிலை, நாட்டுப் பழக்க வழக்கங்களுக்கு இசையத் தங்கள் பழக்க வழக்கங்களையும் மாற்றியமைத்து வாழுந்திறமையுடையவர்களாய் உளர்.

திராவிட மொழிகளில் தமிழே மிகுந்த வலிமை யுடையதும் அயல் மொழிகளைத் தன் வயமாக்கித் தமிழா கவே ஆக்குந் தன்மையுடையதுமாய்க் காணப்படுகிறது. மேலும், தமிழ் மொழி ஒரு பெரிய இலக்கிய கடல். அந்த இலக்கியங்களிற் சில 2,000 வருடங்களுக்கு மேற்பட்ட தொன்மையுடையவை.

இந்திய மொழிகளில் வேதாகமம் முதல் முதல் மொழி பெயர்க்கப்பட்ட தனிப்பெருமை தமிழ் மொழிக்கே உரியது. ஒல்லாந்து இராசகுமாரனான உவில்லியம் 1688 ம் ஆண்டில் இங்கிலாந்து அரசனானபோது இலங்கையிலிருந்த ஒல்லாந்த மிஷனெரிமார் மத்தேயு சுவிசேஷத்தைப் போர்த்துக்கேய மொழியில் பெயர்த்து பின் அதை வட இலங்கை மக்களுக்குப் பயன்படுமாறு தமிழில் மொழி பெயர்த்தனர். புதிய ஏற்பாடு முழுவதும் மொழிபெயர்க்கப்பட்டதோ என்பது நிச்சயமாக கூற முடியாதெனினும் 1694 ல் பழைய ஏற்பாட்டு மொழி பெயர்ப்புத் தொடங்கினதென்று அறியக்கிடக்கிறது. ஆனால் அந்த காலப் பதிப்பு இப்பொழுது இருப்பதாகத் தெரியவில்லை.

ஒல்லாந்த நவீன திருச்சபையின் முதற் பாதிரியாரான பிலிப்பு டி.மெல்கோ (Philp D. Melho) என்பவர் தமிழ் மொழிப் பெயர்ப்பாளராயிருந்து (1748 ம் 1759) தமிழ் மொழிபெயர்ப்புக்களைப் பதித்தாரெனத் தெரியவந்துள்ளது. டென்மார்க் அரசாரான நாலாம் பிறெடிறிக் (Frederik IV) மிகவும் பக்தி வைராக்கியம் உள்ளவர். இந்தியாவில் மிஷனெரி ஊழியம் செய்யப்பட வேண்டுமென்று ஆவல் கொண்டு தமது அரமனைப் பாதிரியாராகிய டாக்குத்தர் லூற்கென்ஸ் (Dr.Lutkens) என்பவரின் உதவியினால் அவர் சொந்த ஊராகிய ஜெர்மனியிலிருந்தே பற்தொலொமேயு ஸீக்கென்பால்க் (Bartholomew Ziegenbalg)என்பவரையும் அவருடைய உடன் மாணவரும் தோழனுமான புளுற்சோ (Plutschau) என்பவரையும் தெரிந்தனுப்பினார்.

அரசரின் ஆதரவு இருந்த போதிலும் இந்தியாவில் வாழ்ந்த டச்சு ஆட்சிப் பீடத்திலி ருந்தவர்கள், அவர்களுக்கு நல்ல வரவேற்புக் கொடுக்கவில்லை. இவர்களுக்கு நேரிட்ட கஷ்டங் களுக்கோர் எல்லையில்லை. முறையே 23,29 வயதிரான இவ்வாலிபரிருவரும் நெடுங் கடற் பிரயாணத்திலும் அந்நிய நாட்டிலும் எவ்வித உதவியுமின்றிப் பட்ட நிஷ்டூரங்கள் எண்ணிக்கைக்கடங்காவாயினும் அவர்களது பக்தி வைராக்கியமும், ஜெபஜீவியமும், ஆத்ம தாகமும் வெற்றியையீட்டிக் கொடுத்தது சந்தோஷத் திற்கிடமே.

சுதேச மக்களுக்குத் தேவகுமாரனின் கதையை தெரிவிப்பதற்குத் தமிழே சிறந்த மொழியென உணர்ந்த இவர்கள் தமிழைக் கற்கலாயினர். 1713 ம் ஆண்டில் ஒரு அச்சுப்பொறியைத் தருவித்துத் துண்டுப் பிரசுரங்களாக வேத பாடங்களை மக்களுக்கு விநியோகஞ் செய்தனர். ஸீக்கென்பால்க் 1715 ல் புதிய ஏற்பாட்டைத் தமிழில் பதிப்பித்து வழங்கினார். 1719ல் இவர் இறைவனடி சேரும்பொழுது பழைய ஏற்பாடும் ரூத்தின் சரித்திரம் வரை மொழிபெயர்கப்பட்டிருந்தது.

1726ல் ஸூல்ற்ஸ் (Schultze) எனப்பட்ட மிஷனெரியால் பழைய ஏற்பாட்டு மொழி பெயர்ப்பு பூர்த்தியாக்கப்பட்டுப் பிரசுரிக்கப்பட்டது. இவர் கர்த்தரின் ஜெபத்தை 8 வெவ்வேறு மொழிகளில் மொழிபெயர்த்துப் பனையோலை ஏடுகளில் எழுதி ஊர்கள்தோறும் வினியோகஞ் செய்தனர்.

1742ல் பிலிப்பு பபிறிசியஸ் (Philp Fabricius) எனப் பெயரிய வேறொரு ஜெர்மனியர் சென்னைக்கு வந்து சேர்ந்தார். 20 வருட முயற்சியின் பெறுபேறாய்ப் புதிய ஏற்பாட்டின் சிறந்த மொழிபெயர்ப்பொன்றை 1773

ல் பதிப்பித்தார். பழைய ஏற்பாடும் 1777ல் வெளிவந்தது. 1774 ல் சங்கீதங்களைச் சந்தக் கவிகளாக்கிப் பிரசுரப்பித்துதவியிருந்தார்.

பபிறிசியஸ் அவர்களின் மொழிபெயர்ப்பு ஆங்கில, ஜர்மன் மொழி பெயர்ப்புக்களிலும் பார்க்க மிகவும் சிறந்ததாயும், மூல நூலின் அர்த்தம் முழுவதையும் இனித்துணர்வதாயுமிருந்ததால் இவருக்குப் பின் வந்த மொழிபெயர்ப்பாளர் மெச்சிக் கூறியிருப்பது வியப்பன்று. லுத்தரன் சபையார் இற்றைவரை வந்த மொழி பெயர்ப்புக்களைவிட இதையே மேலானதெனத் தெரிந்து கைகொள்ளுகின்றனர்.

19 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தோடு கேறி (Carey) போன்ற பெருந்தகையார் முயற்சியால் மிஷனெரி ஊழியமும் வேதமொழிபெயர்ப்பும் பிரபலமாக, பிரித்தானிய பிறதேச வேதாகம சங்கமும் நிறுவப்பட்டது. 1806 ல் டாக்குத்தார் புக்கானன் (Dr.Buchanan) அவர்களின் அறிக்கையின்படி தமிழ் நாட்டிற்கூட போதிய வேதாகம நூல்கள் கிடைக்கவில்லை. மக்கள் ஆவலோடு அவைகளுக்காக மன்றாடிக் கேட்டனர். 1810 ல் தஞ்சாவூரில் 10,000 கிறிஸ்தவர்கள் மத்தியில் ஒருவரிடங்கூட ஒரு வேதாகம் இருக்கவில்லை. பிரித்தானியாவிலிருந்து ஒரு அச்சு இயந்தரமும் பெருந்தொகையான கடிதாசியும் அனுப்பட்டது.

வருஷவீதம் 2,000 பவுன் வீதம் மூன்று வருஷங்களுக்குக் கொடுப்பதாக வாக்களிக்கப்பட்டது. திருவாளர் கோகோவ் (Mr.Kohlhoff) அவர்கள் வேதாகமத்தின் புது வெளியீடு ஒன்றை செய்யும்படி கேட்கப்பட்டார். இதற்கிடையில் செறம்பூரிலிருந்து 5,000 புதிய ஏற்பாடுகள் பிரசுரிக்கப்பட்டு வெளிவந்தன. அந்நாள் தொட்டு இந்நாள்வரை வேதாகம சங்கத்தார் தமிழ் மக்களுக்கு வேதாகமத்தைக் கொடுக்கும் பொறுப்பையேற்று நடத்தி வருகின்றனர்.

இதன் பின்னர் தேவனுடைய வார்த்தைக்குப் பஞ்சம் ஏற்பட்டதேயில்லை. வேதாகம மொழிபெயர்ப்புச் சம்பந்தமாகத் தமிழர்களால் உவந்து போற்றப்படுபவர் பலருளர். ஆயினும், றெனியஸ் (Rhenius), றொற்லர் (Rottler), உவின்ஸ்லோ (Winslow), பேர்சிவல் (Percival) என்பவர்களாலும் ஏனையோராலும் உத்தமமான வேலை செய்யப்பட்டதென்பது நினைவிருத்தல் அவசியம். பல்லாண்டுகளாக பபிறிசியஸ் உடைய பதிப்பும், றெனியஸ் உடைய பதிப்புமே வேதாகம சங்கத்தாரால் வெளிவந்தன. ஆனால் இலங்கைத்தமிழர் இவைகளின் மொழிபெயர்ப்பிலும், அமைப்பிலும் திருப்தி அடைந்திலர். அவர்களின் 'தற்கால மொழிபெயர்ப்பும்' சர்வ சம்மதமாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை.
ஆகவே, ஒரு பரிசீலனைக்குழு நியமிக்கப்பட்டது. அதன் தலைவர் கலாநிதி போவர்(Bower) இதன் பயனால் புதிய ஏற்பாடு 1863ம் பழைய ஏற்பாடு 1868 ம் வெளியிடப்பட்டன. இப்பதிப்பு 'யூனியன் பதிப்பு' (Union Version) எனப்படுகிறது. லுத்தரன் சங்கத்தாரைவிட மற்றெல்லா கிறிஸ்தவ சபைகளும் இதையே உபயோகப்படுத்தி வருகின்றனர்.

சில வருடங்களுக்கு முன் மூல வார்த்தைகள், கருத்துக்கள் சம்பந்தமான பல புது விஷயங்களும் கண்டுபிடிக்கப்பட்டது. டாக்குத்தர் எல்.பி. லார்சென், (Dr.L.P.Larsan) பண்டிதர் ஜி.எஸ். துரைசாமி (G.S.Doraiswamy) அவர்கள் சிரேஷ்ட திருத்துகையாளராய், லுத்தரன் சங்கத்தாரின் உதவியுடன் நுணுக்கமாக பரிசீலனை செய்து, திருச்சபை அனைத்திற்கும் பயன்படுமாறு, ஒரு புதுப் பதிப்பைப் பதிப்பித்தனர். புதிய ஏற்பாடு 1931 ம் ஆண்டிலும் பழைய ஏற்பாடு 1936ம் ஆண்டிலும் வெளியிடப்பட்டன. மக்கள் இரு பதிப்பையும் உபயோகிக்கின்றனர். வழக்கிலிருக்கும் பதிப்பைப் புதிய நூல்கள் இலகுவில் தள்ளிவைத்தல் முடியாத காரியமாகும். ஆகவே, வேதாகம சங்கத்தார் இரு பதிப்புகளையும் பிரசுரித்து விநியோகிக்கின்றனர். இந்திய மொழிகளில் வேதாகமம் முதன் முதல் மொழிபெயர்க்கப்பட்ட தனிப் பெருமை பெற்ற தமிழ் மொழியில் கிறிஸ்தவ பாண்டியத்தின் பலனாக ஒரு மொழிபெயர்ப்புப் பதிப்பு இருப்பது சந்தோஷத்திற்கிடமே.

டென்மார்க் அரசரின் பக்திவைராக்கியத்தின் பெறுபேறாய், பற்தொலொமேயு ஸீகென்பால்க் இந்தியாவுக்கு முதல் முதலாக வந்ததும் யூனியன் பதிப்பின் பரிசீலனைக் குழுவின் சிரேஷ்ட திருத்துகையாளரில் முதல்வரான டாக்குத்தர் எல்.பி. லார்சன் அவர்களும் அதே தேசத்தவராயிருப்பதும் அபூர்வ சந்தர்ப்பமே. நம் பாதைக்குத் தீபமான இப்பரிசுத்த வேதாகமத்தை நமக்குப் பரிந்தளித்த பரனை பணிவோமாக.

மேற் சொல்லப்பட்ட சரித்திரம் கனம் ஹூப்பர்(Hooper) என்பவரால் இயற்றப்பட்ட புத்தகத்திலிருந்தெடுக்கப்பட்டது.

நன்றி
பரிசுத்த வேதாகம ஒத்தவாக்கிய விளக்கவுரை

# தமிழ் திருமுழுக்கு சபையின் நிகழ்வுகள்

தமிழ் ஆராதனை - ஞாயிறு 15.00

வேதப்படிப்பு - வெள்ளி 18.00

உபவாச ஜெபம் - மாதத்தின் முதல் சனி 10.00

இளைஞர் ஐக்கியம் - சனி 10.00

தமிழ்ப்பாடசாலை - சனி 11.00

இயேசு கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதரரே...
உங்கள் தேவைகளுக்காக ஜெபிக்கவும், உங்கள் பிரச்சனைகளுக்கும்,
கேள்விகளுக்கும் வேதத்தின் அடிப்படையில் விடையளிக்கவும்,
நாங்கள் வாஞ்சையாயிருக்கிறோம்



Listen to your family radio
Viduthalai Fm www.v1fm.com

On live... Man-Wed 17:00 - 20:00
Fridays 21:30 - 24:30

**For your prayer request call us: 00 47 21 44 75 84**

Tamil Baptist Menighet
Vålerengata 2
0657 Oslo
Tel- 64925691/ Mob - 95881223
http://tamilbaptist.net

Pastor: Anton Sinnathamby
Tlf. 64925691/95881223
e-mail: anto-b@online.no
www.tamilbaptist.com
www.tamilbaptist.net